உ

எட்டுத் தொகையுள்

இரண்டாவதாகிய

குறுந்தொகை

மூலம்

பதிப்பாளர் :

வித்வான். சோ. அருணாசல தேசிகர்

Reserved] 1933 [விலை ரூபா, ஒன்று

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	முகவுரை ...	... iii
2.	குறுந்தொகை ...	... 1
3.	செய்யுள் முதற்குறிப்பு ...	... 149
4.	பாடினோர் பெயர் ...	... 155
5.	சொல்லகராதி ...	... 159
6.	பாடபேதம் ...	... 190
7.	பிழை திருத்தம் ...	... 193

முகவுரை

சங்கச் செய்யுட்களை ஆன்றோர்கள் மேற்கணக்கு நூல்கள் கீழ்க்கணக்கு நூல்கள் என இரண்டுவகையாகப் பகுத்திருக்கின்றனர். இவற்றுள் மேற்கணக்கு நூல்கள் பத்துப் பாட்டு எட்டுத்தொகை யென இரண்டு வகைப்படும். எட்டுத் தொகையுள் இரண்டாவது தொகையாக விளங்குவது குறுந் தொகையாகும். அதனை எட்டுத் தொகையின் பெயரினை யுணர்த்தும் வெண்பாவால் அறியலாம்.

> ‘ நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த எட்டுத் தொகை ’

இத்தொகைகள் பொருளாலும் பாவாலும் அளவாலும் தொகுக்கப்பட்டுள்ளன. குறுந்தொகை அகப்பொருளாலும் அளவாலும் தொகுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொகுத்தோன் பூரிக்கோ. இதிலுள்ள பாடல்கள் நாலடி சிற்றெல்லையும் எட்டடி பேரெல்லையும் உடையன. இதனானே இத்தொகை குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. இவ்வண்ணமே அடியினெல்லை மிக்குடைய பாடல்களாலே தொகுக்கப் பட்டமை கருதி அகநானூறு நெடுந்தொகை என் றழைக்கப் பெறும். அகப்பொருளாவது தலைவனும் தலைவியும் உள்ளத் துணர்வாலே நுகரும் இன்பம்பற்றிய ஒழுக்கம்.

இக்குறுந்தொகை நானூற்றொரு அகவற்பாக்களை யுடையதாக விருக்கின்றது. பாரதம் பாடிய பெருந்தேவனார் இதற்குக் கடவுள் வணக்கச் செய்யுள் எழுதியுள்ளார். அதனையும் சேர்க்கின் செய்யுட்கள் நானூற்றிரண்டாகும். பாரதம் பாடிய பெருந்தேவனார் இந்நூலில் முருகக்கடவுளுக்கு வணக்கம் கூறியுள்ளார். இத்தொகை பாடிய புலவர்கள் இருநூற்றைறவர் என்பது நூலின் இறுதியில் காணப்படுகின்றது. ஆனால் இப்பொழுது சிற்சில பாக்களைப் பாடியவர் பெயர் காணப்படவில்லை.

பாடினோர் பெயர்களுட் சில செய்யுளிடைப்பட்ட அருந் தொடர்களாலேயே குறிக்கப்பட்டுள்ளன. அவை அப்பெயர் களின் அமைப்பாலேயே விளங்கும். குறுந்தொகை நாற்பத் தோராவது செய்யுளில்,

'மக்கள் போகிய அணிலாடு முன்றிற்
புலம்பில் போலப் புல்லென்று'

என ஒப்புமை கொடுத்த காரணம் பற்றி இதைப்பாடிய புலவருக்கு அணிலாடு முன்றிலார் என்று பெயர் வந்துள்ளது.

இத் தொகைக்குப் பேராசிரியர் முதலில் உரையெழுதி யுள்ளாரென்றும், அவர் இருபது செய்யுட்களுக்கு உரை யெழுதாது விட்டுவிட்டார் என்றும், அவ்விருபது செய்யுட் களுக்கும் நச்சினார்க்கினியர் உரை யெழுதியுள்ளாரென்றும் நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தானும் மற்றொரு வெண்பாவானும் நாம் அறிதல் கூடும். அவை வருமாறு:—

'நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்

பொருடெறி குறுந்தொகை இருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
இதுபொரு ளென்றதற் கேற்ப உரைத்தும்.'

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.

இவ்வுரைகள் இப்பொழுது கிடைத்தில.

இக் குறுந்தொகையைச் சில்லாண்டுகட்கு முன்னர்த் திருக்கண்ணபுரத்துத் திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் என்பவர் தாமெழுதிய புத்துரையுடன் பதிப்பித்துள்ளார். அப்புத்தகம் இப்பொழுது கிடைக்கவில்லை. அப்பதிப்பில் அவர் கொண்டுள்ள பாடங்களினும் பின்னர் விளங்கிய பிரதிபேதங்கள் சிறந்தனவாகக் காணப்படுகின்றன. பதினோராவது பாட்டில் 'வல்வேற் காட்டினன் னாட்டு' என்பது 'வல்வேற்கட்டி நன்னாட்டு' என்றும் பதினைந்தாவது பாட்டில் 'நல்லூர்க்கோசர்' என்பது 'நாலூர்க்கோசர்' என்றும், பதினாறுவது பாட்டில் 'தோழி கணவர்தம்' என்பது 'தோழி கானவர்' என்றும் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் பாடபேதங்கள் பலவாதலின் ஆராய்ச்சியாளர்க்கும் கற்போருக்கும் பயன்படும் பொருட்டு இத்தொகைச் செய்யுட்களை உரையாசிரியர்களின் உரைக்கு இடையே காணப்படும் பாடங்களைக் கொண்டும் கிடைத்த வேறு பிரதிகளைக் கொண்டும் ஒருவாறு திருத்தி மூலமட்டும் இப்பொழுது அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இதனை யச்சிட்டபின்னர்க் கிடைத்த பிரதிபேதங்களும் தனியே சேர்க்கப்பட்டுள்ளன. எவ்வளவு முயன்றும் அச்சுப்

பிழை சில அறியாமலே நேர்ந்துவிட்டமையின் அவற்றைத் திருத்திக்கொண்டு வாசிக்க வேண்டுகிறேன்.

ஆராய்ச்சியாளர்க்குச் சிறிது பயன்படும் பொருட்டு இத் தொகைச் செய்யுளிற் காணப்படும் அருஞ்சொற்களும் ஒருவாறு தொகுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன.

இக்குறுந்தொகையை அச்சிடுதற்குச் சென்னைச் செண்ட் பால்ஸ் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் அ. கி. பராக்கிரம முதலியார் அவர்கள் ஒப்பு நோக்குதல் திருத்தல் முதலாகச் செய்த உதவி மறக்கற்பாலதன்று.

சென்னைப்
புரசைப்பாக்கம்
9—4—1933 — வித்வான். சோ. அருணசல தேசிகர்

எட்டுத் தொகையுள்

இரண்டாவதான

குறுந்தொகை

கடவுள் வாழ்த்து

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின் றாலுலகே.

பாரதம் பாடிய பெருந்தேவனார்

க. குறிஞ்சி

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

என்பது தோழி கையுறை மறுத்தது. திப்புத்தோளார்

உ. குறிஞ்சி

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

என்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தவழித் தலைமகனை இயற்கைப்புணர்ச்சிக்கண் இடையீடுபட்டு நின்ற தலைமகன் நாணின் நீக்குதற்பொருட்டு மெய்தொட்டுப்பயிறன் முதலாயின அவண்மாட்டு நிகழ்த்திப் பாடுமாற்றுற், கூடிய தலைவன் அன்பு தோற்ற நலம் பாராட்டியது.

இறையனார்

ஙூ. குறிஞ்சி

நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

என்பது தலைமகன் சிறைப்புறமாக அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

தேவகுலத்தார்

ச. நெய்தல்

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் னெஞ்சே.

என்பது பிரிவிடை யாற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

காமஞ்சேர் குளத்தார்

ரு. நெய்தல்

அதுகொ றோழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிலைப் புன்னை
யுடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
பல்லித ழுண்கண் பாடொல் லாவே.

என்பது இதுவுமது. நரிவெரூஉத் தலையார்

சா. நெய்தல்

நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓரியான் மன்ற துஞ்சா தேனே.

என்பது வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் சொல்லியது. பதுமனர்

எ. பாலை

வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவு சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே.

என்பது செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது[1].
பெரும் பதுமனர்

(பி - ம்.) 1. கூறியது.

அ. மருதம்

கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன[1] செய்யுந்தன் புதல்வன் றாய்க்கே.

என்பது கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் எனக் கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்கச் சொல்லியது.

ஆலங்குடி வங்கனார்

கூ. நெய்தல்

யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய[2] வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் கரப்பா டும்மே.

என்பது தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது. **கயமனார்**

ய. மருதம்

யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னாணிய வருமே.

என்பது இதுவுமது. **ஓரம்போகியார்**

(பி - ம்.) 1. மேவன. 2. தமியள்.

நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தநங் குவளையங் கண்ணே.

என்பது தோழியிற் கூட்டங்கூடி ஆற்றுவகையான் ஆற்றுவித்தும் பிரிய வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது. கபிலர்

கச. குறிஞ்சி

அமிழ்துபொதி செந்நா வஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றாங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்
நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா அ நாணுகஞ் சிறிதே.

என்பது 'மடன்மாகூறு மிடனுமாருண்டே' என்பதனுன் தோழி துறைமறுத்துழித் தலைமகன் மடலேறுவ லென்பதுபடச் சொல்லி யது. தொல்கபிலர்

கரு. பாலை

பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

என்பது உடன்போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றாள்; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

ஔவையார்

கசு. பாலை

உள்ளார் கொல்லோ தோழி கானவர்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

என்பது பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகளாற்றமைகண்டு தோழி கூறியது. பாலைபாடிய் பெருங்கடுங்கோ

கஎ. குறிஞ்சி

மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ் கொளினே.

என்பது தோழியிற் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன் தோழி குறையுறுமஞ் கூறியது. பேரெயின் முறுவலார்

கஅ. குறிஞ்சி

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

என்பது இரவுக்குறி வந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப் பட்டு வரைவு கடாயது. கபிலர்

கக. மருதம்

எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்

றிணைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

என்பது உணர்ப்புவயின் வாரா வூடற்கண் தலைமகன் சொல்லியது.
பரணர்

உ௰. பாலை

அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே.

என்பது செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.
கோப்பெருஞ் சோழன்

உக. முல்லை

வண்டுபடத் ததைந்த கொடியிண ரிடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
யானோ தேறேனவர் பொய்வழங் கலரே.

என்பது பருவம் வந்துழியும் ஆற்றுவித்த தோழி அவர் வரக் குறித்த பருவ வரவின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறென்று தன்னுள்ளே கவன்றாட்கு அவளது குறிப்பறிந்த தலைமகள், 'கானம் அவர் வருங் கார்காலத்தைக் காட்டிற்றாயினும் யான் இது கார் காலமென்று தேறேன் அவர் பொய்கூறு ராகலின்' எனத் தான் ஆற்றுவலென்பது படச் சொல்லியது.
ஓதலாந்தையார்

உஉ. பாலை

நீர்வார் கண்ணை நீயிவ ணொழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்

சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழுந்
தேஎ ரெண்ணுத னின்னெடுஞ் செலவே.

என்பது செலவுக் குறிப்பறிந்து ஆற்றளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. சேரமானெந்தை

உங. குறிஞ்சி

அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டேயவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

என்பது கட்டுக்காணிய நின்ற விடத்துத் தோழி அறத்தோடு நின்றது. ஔவையார்

உச. பாலை

கருங்கால் வேம்பி னொண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ
ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகளிறு மிதித்த வொருபழம் போலக்
குழையகக் கோடியோர் நாவே
காதலரகலக் கல்லென் றவ்வே.

என்பது பருவங்கண்டு ஆற்றளாகிய கிழத்தி யுரைத்தது. பரணர்

உரு. குறிஞ்சி

யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால

ஒழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதா மணந்த ஞான்றே.

என்பது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. கபிலர்

உகூ. குறிஞ்சி

அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினுந்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து[1] முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே.

என்பது நற்றயுஞ் செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு இஃது எற்றினானாயிற்றென்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்துத் தலைமகள் வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வமென்று கூறக்கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது. வெள்ளிவீதியார்

உஎ. பாலை

கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇய[2] வேண்டுந்
திதலை யல்குலெம் மாமைக் கவினே.

என்பது பிரிவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. கொல்லனழிசி

(பி - ம்.) 1. முத்துகிரை யொத்த. 2. உணியர்.

உஅ. பாலை

முட்டு வேன்கொ றுக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமர லசைவளி யலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

என்பது வரைவிடை யாற்றளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. ஔவையார்

உகூ. குறிஞ்சி

நல்லுரை யிகந்து புல்லுரைத் தாஅய்ப்
பெயனீர்க் கேற்றன பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதயர் வுற்றனை நெஞ்சே என்றும்
பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

என்பது இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன் இவர் எம்மை மறுத்தாரென்று வரைந்துகொள்ள நினையாது பின்னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது. ஔவையார்

௩௰. பாலை

கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுற மரீஇ
வாய்த்தரு[1] பொய்க்கன மருட்ட வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை

(பி - ம்.) 1. *வாத்தகை.*

வண்டுபடு மலரிற் சாஅய்த்
தமியேன் மன்ற வளியன் யானே.

என்பது அவர் நின்னை வரைந்துகோடல் காரணத்தாற் பிரியவும் நீ ஆற்றியிராது ஆற்றாயாகின்றது என்னென வினாய தோழிக்குத் தலைமகள் யான் ஆற்றியுள்ளேனாகவும் களவுவந்து என்னை இங்ஙன் நலிந்ததெனக் கூறியது. கச்சிப்பேட்டு நன்னாகையார்

௫௧. மருதம்

மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

என்பது நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது. ஆதிமந்தி

௫௨. குறிஞ்சி

காலையும் பகலுங் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தோற்றெனத்[1] தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

என்பது பின்னின்றான் கூறியது. அள்ளூர் நன்முல்லை

௫௩. மருதம்

அன்னா யிவனோ ரிளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ

(பி - ம்.) 1. தேற்றென.

இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.

என்பது வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது. படிமத்துமோசிகீரன்[1]

௩௪. மருதம்

ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றாய்
இனியது கேட்டின் புறுகவிவ் வூரே
முனாஅ தியானையங்[2] குருகின் கானலம்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉங்
குட்டுவன் மாந்தை யன்னவெங்
குழைவிளங் காய்நுதற் கிழவனு மவனே.

என்பது வரைவுமலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்திக்குச் சொல்லியது. கொல்லிக்கண்ணன்

௩௫. மருதம்

நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.

என்பது பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.
கழார்க்கீரனெயிற்றி

௩௬. குறிஞ்சி

துறுகல் லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்

(பி - ம்.) 1. படுமரத்து மோசிகீரன். 2. யுண்.

நெஞ்சுகள னாக நீயலென் யானென
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தவாஅ வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே.

என்பது வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றாளெனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது. பரணர்

௩௭. பாலை

நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளிக்கும்[1]
அன்பின தோழி யவர்சென்ற வாறே.

என்பது தோழி கடிது வருவரென் றாற்றுவித்தது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ

௩௮. குறிஞ்சி

கான மஞ்ஞை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங்
குன்ற நாடன் கேண்மை யென்றும்
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
ணீரோ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.

என்பது வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றத் தோழிக்குக் கூறியது. கபிலர்

௩௯. பாலை

வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கும்

(பி - ம்.) 1. பிளக்கும்.

மலையுடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்ற வாறே.

என்பது பிரிவிடையாற்றல் வேண்டுமென்ற தோழிக்கு யாங்ஙனம் ஆற்றுவேனெனத் தனது ஆற்றாமை மிகுதி தோன்றத் தலைமகள் கூறியது. ஔவையார்

சு0. குறிஞ்சி

யாயும் யாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர்ப் பிரிவரெனக் கருதி யஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறியது. செம்புலப்பெயனீரார்

சுக. பாலை

காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
புலம்பில் போலப் புல்லென்
றலப்பென் றோழியவ ரகன்ற ஞான்றே.

என்பது பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அணிலாடுமுன்றிலார்

சுஉ. குறிஞ்சி

காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென வருவி

விடாகத் தியம்பு நாடவெந்
தொடர்புந் தேயுமோ நின்வயி னானே.

என்பது இரவுக்குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய் பாட்டான் மறுத்தது. கபிலர்

சா௩. பாலை

செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
ஆயிடை யிருபே ராண்மை செய்த
பூச லல்லார்க் கதுவியாங்கென்
னல்ல னெஞ்ச மலமலக் குறுமே.

என்பது பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது. ஔவையார்

சாச. பாலை

காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

என்பது இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது. வெள்ளிவீதியார்

சரு. மருதம்

காலை யெழுந்து கடுந்தேர்ப் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல லூர னெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன் றாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

என்பது தலைமகற்குப் பாங்காயினார் வாயில் வேண்டியவழித் தோழி வாயில் நேர்ந்தது. ஆலங்குடிவங்கனார்

சசு. மருதம்

ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கன் மாந்தி மன்றத்
தெருவி னுண்டாது குடைவன வாடி
இல்லிறைப் பள்ளித் தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொ றோழியவர் சென்ற நாட்டே.

என்பது பிரிவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது. மாமிலாடன்

சஎ. குறிஞ்சி

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

என்பது இரா வந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது.

நெடுவெண்ணிலவினார்

சஅ. பாலை

தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்
இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதற் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பி னொருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

என்பது பகற்குறிக்கட் காணும்பொழுதினுங் காணாப்பொழுது பெரிதாகலின் வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது. பூங்கணுத்திரையார்

சசு. நெய்தல்

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரெங் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

என்பது தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்தவழி ஆற்றளாகிய தலைமகள் அவனைக் கண்டவழி அவ்வாற்றமை நீங்குமன்றே; நீங்கியவழிப் பள்ளியிடத்தானாகிய தலைமகற்குச் சொல்லியது.

அம்மூவனார்

ருo. மருதம்

ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே யிறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

என்பது கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது.

குன்றியனார்

ருக. நெய்தல்

கூர்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயுநனி வெய்யள்
எந்தையுங் கொடீஇயர் வேண்டும்
அம்ப லூரு மவனொடு மொழிமே.

என்பது வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றளாகிய தலைமகட்குத் தோழி வரைவுமலிவு கூறியது.

குன்றியனார்

ருஉ. குறிஞ்சி

ஆர்களிறு மிகுத்த நீர்திகழ் சிலம்பிற்
சூரசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பன் மடந்தை
பரந்தனெ னல்லனோ விறையிறை யானே.

என்பது வரைவுமலிவு கேட்ட தலைமகட்குத் தோழி முன்னுளில் தான் அறத்தோடு நின்றமை காரணத்தான் இது விளைந்த தென் பதுபடக் கூறியது.

பனம்பாரனார்

ருங. மருதம்

எம்மணங் கினவே மகிழ்ந முன்றின்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறுஞ்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
எக்கர் நண்ணிய வெம்மூர் வியன்றுறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே.

என்பது வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்கு உரைத்தது.

கோப்பெருஞ்சோழன்

ருச. குறிஞ்சி

யானே யீண்டை யேனே யென்னலன்
ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்குங்
கானக நாடனொ டாண்டொழிந் தன்றே.

என்பது வரைவு நீட்டித்தவழி ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

மீனெறிதூண்டிலார்

ருரு. நெய்தல்

மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் துவலையொடு மங்கு றைஇக்
கையற வந்த தைவர லூதையோ
டின்னு வுறையுட் டாகுஞ்
சின்னாட் டம்மவிச் சிறுநல் லூரே.

என்பது நீ வரைவோடு புகுதாயேல் இவள் இறந்துபடுமெனத் தோழி தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

நெய்தற்கார்க்கியர்

ருசு. பாலை

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்
குளவி மொய்த்த வழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மொ டுணீஇய
வருகதில் லம்ம தானே
அளியளோ வளியளென் னெஞ்சமர்ந் தோளே.

என்பது தலைமகன் கொண்டு தலைப்பிரிதலை மறுத்துத் தானே போகின்றவழி இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது.

சிறைக்குடியாந்தையார்

ருஎ. நெய்தல்

பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே.

என்பது காப்பு மிகுதிக்கண் ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

சிறைக்குடியாந்தையார்

ருஅ. குறிஞ்சி

இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்லை
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.

என்பது கழற்றெதிர்மறை. வெள்ளிவீதியார்

ருகூ. பாலை

பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அதலைக் குன்றத் தகல்வாய்க் குண்டுசுனைக்
குவளையொடு பொதிந்த குளவிநா றுநறுநுதல்
தாவென மறப்பரோ மற்றெனு முயலவுஞ்
சுரம்பல விளங்கிய வரும்பொருள்
நிரம்பா வாகலி னீடலோ வின்றே.

என்பது பிரிவிடையழிந்த கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.
மோசிகீரன்

கூய. குறிஞ்சி

குறுந்தாட் கூதாளி[1] ராடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட விருங்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்
தூட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவா ராயினும்
பல்காற் காண்டலு முள்ளத்துக் கினிதே.

என்பது பிரிவிடை ஆற்றாமையால் தலைமகள் தோழிக்கு உரைத்தது. பரணர்

(பி - ம்.) 1. கூதளிர் ; கூதாளியா.

௬௧. மருதம்

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறாஉ மிளையோர் போல
உற்றின் புறேஎ மாயினு நற்றேர்ப்
பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனெஞ் செறிந்தன வளையே.

என்பது தோழி தலைமகன் வாயில்கட்கு உரைத்தது.

தும்பிசேர்கீரன்

௬௨. குறிஞ்சி

கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாயது முயங்கற்கு மினிதே.

என்பது தலைமகன் இடந்தலைப்பாட்டின்கட் கூடலுறும் நெஞ்சிற்குச் சொல்லியது. சிறைக்குடியாந்தையார்

௬௩. பாலை

ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ
எம்மை யுய்த்தியோ வுரைத்திசி னெஞ்சே.

என்பது பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

உகாய்க்குடிகிழார்

௬௪. முல்லை

பல்லா நெடுநெறிக் கன்றா வந்தெனப்
புன்றலை மன்ற நோக்கி மாலை

மடக்கட் குழவி யவண்வக் தன்ன
நோயே மாகுத லறிந்துஞ்
சேயர் தோழி சேய்நாட் டோரே.

என்பது பிரிவிடை ஆற்றமைகண்டு வருவர் எனச் சொல்லிய தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. கருவூர்க்கதப்பிள்ளை[1]

சரு. முல்லை

வன்பாற் றெள்ளறல் பருகிய விரலைதன்
இன்புறு துணையொடு மறுவந் துகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்
வாரா துறையுநர் வரனசைஇ
வருந்திநொந் துறைய விருந்திரோ வெனவே.

என்பது பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.
கோவூர்கிழார்

சசா. முல்லை

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே.

என்பது பருவங்கண்டழிந்த தலைமகளைத் தோழி பருவமன்றென வற்புறீஇயது. கோவத்தன்

சஎ. பாலை

உள்ளார் கொல்லோ தோழி கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம்
புதுநா ணுழைப்பா னுதிமாண் வள்ளுகிர்ப்

(பி - ம்.) *கருவூர் கந்தப்பிள்ளை சாத்தனார்.*

பொலங்கல வொருகா சேய்க்கு
நிலங்கரி கள்ளியங் காடிறந் தோரே.

என்பது பிரிவிடை யாற்றாத தலைமகள் தோழிக்கு உரைத்தது.
அள்ளூர்நன்முல்லை

கூஅ. குறிஞ்சி

பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தின்
ஊழ்ப்படு முதுகா யுழையினங் கவரும்
அரும்பனி யச்சிரந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே.

என்பது பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது. அள்ளூர்நன்முல்லை

கூகூ. குறிஞ்சி

கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்குஞ்
சார னாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.

என்பது தோழி இரவுக்குறி மறுத்தது. கடுந்தோட்கரவீரன்

எ0. குறிஞ்சி

ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமகள்
நறுந்தண் ணீர ளாரணங் கினளே
இனைய ளென்றவட் புனையள வறியேன்
சிலமெல் லியவே கிளவி
அணைமெல் லியல்யான் முயங்குங் காலே.

என்பது புணர்ந்து நீங்குந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. ஓரம்போகியார்

எக. பாலை

மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
அரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ளுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு[1] மகளே.

என்பது பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுக்கியது. கருவூர்ஓதஞானி

எஉ. குறிஞ்சி

பூவொத் தலமருந் தகைய வேவொத்
தெல்லாரு மறிய நோய்செய் தனவே
தேமொழித் திரண்ட மென்றோண் மாமலைப்
பரீஇ வித்திய வேனற்
குரீஇ யோப்புவாள் பெருமழைக் கண்ணே.

என்பது தலைமகன்தன் வேறுபாடு கண்டு வினவிய பாங்கற்கு உரைத்தது. மள்ளனார்

எங. குறிஞ்சி

மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்ற நாட்டிற்[2] போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே.

என்பது பகற்குறி மறுத்து இரவுக்குறி நேர்ந்து அதுவும் மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது. பரணர்

எச. குறிஞ்சி

விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்

(பி - ம்.) 1. *நல்குவர்.* 2. *கொன்று நாட்டிற்.*

யாந்தற் படர்ந்தமை யறியான் றானும்
வேனிலா னேறு போலச்
சாயின னென்பநம் மாணல நயந்தே.

என்பது தோழி தலைமகன் துறைமறுதவாற்றுற் கூறியது.

விட்டகுதிரையார்

எரு. மருதம்

நீகண் டனையோ கண்டார்க்கேட் டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை பூஞ்சுனை படியும்
பொன்மலி பாடினி பெறீஇயர்
யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

என்பது தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது.

படிமத்துமோசிகீரனுர்

எசு. குறிஞ்சி

காந்தள் வேலி யோங்குமலை நன்னாட்டுச்
செல்வ னென்ப வோங்கல் வரைமார்பன்
சிலம்பிற் சேம்பி னலங்கல் வள்ளிலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇத்
தண்வரல் வாடை தூங்குங்
கடும்பனி யச்சிர நடுங்கஞ ருறவே.

என்பது பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரியுமுன்னர் உணர்ந்த தலைமகள் சொல்லியது.

கிள்ளிமங்கலங் கிழார்

எஎ. பாலை

அம்ம வாழி தோழி யாவதுந்
தவறெனிற் றவறோ விலவே வெஞ்சுரத்
துலந்த வம்பல ருவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநீ ராகும்

அரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

என்பது பிரிவின்கண் ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. **மதுரை மருத னிளநாகனார்**

எஅ. குறிஞ்சி

பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்
சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென வுணரார் மாட்டுஞ்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே.

என்பது பாங்கன் தலைமகற்குச் சொல்லியது. **நக்கீரர்**

எகூ. பாலை

கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்க லுலவை யேறி யொய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்ச்
சேர்ந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்
கொல்லே மென்ற தப்பற்குச்[1]
சொல்லா தேகல்[2] வல்லு வோரே.

என்பது பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. **குடவாயிற் கீரத்தனார்**

அம. மருதம்

கூந்த லாம்பன் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறுந் தானஃ

(பி - ம்.) 1. தப்பல். 2. தகறல்.

தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்
நுகம்படக் கடக்கும் பல்வேல் லெழினி
முனையான் பெருநிரை போலக்
கிளையொடு காக்கதன் கொழுநன் மார்பே.

என்பது தலைமகட்குப் பாங்காயினர் கேட்பப் பரத்தை சொல்லி யது. ஔவையார்

௩௧. நெய்தல்

இவளே
நின்சொற் கொண்ட வென்சொற் றேறிப்
பசுநனை ஞாழற் பல்கிளை[1] யொருசிறைப்
புதுநல னிழந்த புலம்புமா ருடையள்
உதுக்காண் டெய்ய வுள்ளல் வேண்டும்
நிலவு மிருளும் போலப் புலவுத்திரைக்
கடலுங் கானலுந் தோன்றும்
மடல்சூழ்[2] பெண்ணையெஞ் சிறுநல் லூரே.

என்பது தோழியிற் கூட்டம் கூடிப் பிரியும் தலைமகற்குத் தோழி சொல்லியது. வடமவண்ணக்கன்[3]

௩௨. குறிஞ்சி

வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்
பழாஅ லென்றுநம் மழுதகண் டுடைப்பார்
யாரா குவர்கொ றோழி சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி யச்சிரம் வாரா தோரே.

என்பது பருவங்கண்டழிந்த தலைமகள் வருவரென்று வற்புறுத்தித் தோழிக்குச் சொல்லியது. கடுவன் மள்ளன்

(பி - ம்.) 1. சினை. 2. மடலூழ் 3. வடமவண்ணக்கன் பேரிசாத்தன்.

அரு. குறிஞ்சி

அரும்பெற லமிழ்த மார்பத மாகப்
பெரும்பெய ருலகம் பெறீஇயரோ வன்னை
தம்மிற் றமதுண் டன்ன சினைதொறுந்
தீம்பழந் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வருமென் றோளே.

என்பது தலைமகன் வரைந்தெய்துத லுணர்த்திய செவிலியைத் தோழி வாழ்த்தியது.

வெண்பூதன்

அச. பாலை

பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனெனென்
இனியறிந் தேனது துனியா குதலே [றனள்
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையுங் காந்தளு நாறி
ஆம்பன் மலரினுந் தான்றண் ணியளே.

என்பது மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

மோசிகீரன்

அரு. மருதம்

யாரினு மினியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே.

என்பது வாயில்வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி வாயின் மறுத்தது.

வடமவண்ணக்கன் தாமோதரன்

௮௬. குறிஞ்சி

சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறருங் கேட்குந ருளர்கொல் லுறைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
தியானுளம் புலம்புதொ றுளம்பு
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

என்பது ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

வெண்கொற்றன்

௮௭. குறிஞ்சி

மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதும்
கொடிய ரல்லரெங் குன்றுகெழு நாடர்
பச்சைஇப் பசந்தன்று நுதலே
ஞெகிழ ஞெகிழ்ந்தன்று தடமென் றோளே.

என்பது தலைமகள் தெய்வத்திற்குப் பராஅயது. கபிலர்

௮௮. குறிஞ்சி

ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் கொல்லுங்[1] துன்னருஞ் சோலை
நடுநாள் வருதலும் வரூஉம்
வடுநா ணலமே தோழி நாமே.

என்பது இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி தலைமகட்குச் சொல்லியது. மதுரைக் கதக்கண்ணன்

(பி - ம்.) 1. சோலும்.

அசு. மருதம்

பாவடி யுரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்க ளுவறனு நுவல்ப
அழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்[1]
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே.

என்பது தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன்னுளே சொல்லுவாளாய்ச் சொல்லியது.

தலைமகட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லி வாயின் மறுத்ததூஉமாம்.

பரணர்

கூ௰. குறிஞ்சி

எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குன் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட விழுக்கிய பூநாறு பலவுக்கனி
வரையிழி யருவி யுண்டுறை தரூஉங்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பின் றன்றே.

என்பது வரைவு நீட்டித்தவழி ஆற்றளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

மதுரை எழுத்தாளன் சேந்தன்பூதன்

கூக. மருதம்

அரிற்பவர் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉம்

(பி - ம்.) 1. யன்னயென்.

தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் னெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சிக்
கோன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே.

என்பது பரத்தையர்மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில்வேண்டிப் புக்கவழித் தன்வரைத்தன்றி அவன் வரைத்தாகித் தன்னெஞ்சு நெகிழ்ந்துழித் தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.

பரத்தையிற் பிரிந்து வந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியதுஉமாம். ஔவையார்

கூஉ. நெய்தல்

ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே

என்பது காமமிக்க கழிபடர் கிளவியாற் பொழுதுகண்டு சொல்லியது. தாமோதரன்

கூங. மருதம்

நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினு முரைய லவர்நமக்
கன்னையு மத்தனு மல்லரோ
புல்லிய தெவனோ வன்பிலங் கடையே.

என்பது வாயிலாகப் புக்க தோழிக்கு வாயின் மறுத்தது.

அள்ளூர் நன்முல்லை

கூச. முல்லை

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்
தரும்பே முன்னு மிகச்சிவந் தனவே
யானே மருள்வேன் றோழி பானாள்
இன்னுந் தமியர் கேட்பிற் பெயர்த்தும்
என்னா குவர்கொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலைத் தத்த
கருவி மாமழைச் சிலைதருங் குரலே.

என்பது பருவங்கண்டு ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லென்பதுபடத் தலைமகள் சொல்லியது. கருக்கண்ணன்

கூரு. குறிஞ்சி

மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகத்[1] ததும்பும் பன்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே.

என்பது தலைமகன் பாங்கற்கு உரைத்தது. கபிலர்

கூசா. குறிஞ்சி

அருவி வேங்கைப் பெருமலை நாடற்
கியானெவன் செய்கோ வென்றி யானது
நகையென வுணரே னாயின்
என்னா குவைகொ னன்னுத னீயே.

என்பது தலைமகனை இயற்பழித்துத் தெருட்டுந் தோழிக்குத் தலை மகள் இயற்படச் சொல்லியது. அள்ளூர் நன்முல்லை

கூஎ. நெய்தல்

யானே யீண்டை யேனே யென்னலனே
ஆனா நோயொடு கான லஃதே

(பி - ம்) 1. கனமுகக.

துறைவன் றம்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே.

என்பது வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லி யது. வெண்பூதி

கூஅ. முல்லை

இன்ன ளாயின ணன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத் தலர்சில கொண்டே.

என்பது பருவங்கண் டழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது. கோக்குளமுற்றன்

கூகூ. முல்லை

உள்ளினெ னல்லனோ யானே யுள்ளி
நினைத்தனெ னல்லனோ பெரிதே நினைத்து
மருண்டனெ னல்லனோ வுலகத்துப் பண்பே
நீடிய மராஅத்த கோடுதோய் மலிர்நிறை
இறைத்துணைச் சென்றற் றாஅங்
கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளவே.

என்பது பொருண்முற்றிப் புகுந்த தலைமகன் எம்மை நினைத்தும் அறியீரோ என்ற தோழிக்குச் சொல்லியது. ஔவையார்

க00. குறிஞ்சி

அருவிப் பரப்பி னைவனம் வித்திப்
பருவிலைக் குளவியொடு பசுமரல் கடுக்குங்
காந்தளஞ் சிலம்பிற்[1] சிறுகுடி பசிப்பிற்[2]
கடுங்கண் வேழத்துக்[3] கோடுகொடுத் துண்ணும்
வல்வில் லோரிக் கொல்லிக் குடவரைப்

பி - ம்) 1. காந்தள் வேலிச். 2. பசித்தென. 3. யானை.

பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே.

என்பது பாங்கற் குரைத்தது. அல்லதூஉம் அறிப்பட்டு மீள்கின்றான் தன் னெஞ்சிற்குச் சொல்லியதூஉமாம். கபிலர்

கoக. குறிஞ்சி

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தே ணாடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மா றுபடூஉம் வைகலோ டெமக்கே.

என்பது தலைமகனுக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது; வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதூஉமாம்.
பரூஉமோவாய்ப் பதுமன்

கoஉ. நெய்தல்

உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமஞ்
சான்றோ ரல்லர்யா மரீஇ யோரே.

என்பது ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யான் யாங் ஙனம் ஆற்றுவேன் என்றது. ஔவையார்

கoரு. நெய்தல்

கடும்புன றொடுத்த நடுங்கஞ ரள்ளற்
கவிரித ழன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக் கெவ்வ மாகத்
தூஉந் துவலைத் துயர்கூர் வாடையும்

வாரார் போல்வர்நங் காதலர்
வாழேன் போல்வன் றோழி யானே.

என்பது பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.
வாயிலான்றேவன்

கoச. பாலை

அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்திற் றண்சித றுறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
பிரியு நாளும் பலவா குகவே.

என்பது பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது; சிறிய உள்ளிப் பெரிய மறக்க வேண்டாவோ என்ற தோழிக்குக் கிழத்தி கூறியதூஉமாம். காவன்முல்லைப்பூதனார்

கoரு. குறிஞ்சி

புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட சில்குரல்[1]
அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று[2] நடுங்குஞ்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணொடு நினைப்பா கும்மே[3]

என்பது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.
நக்கீரர்

கoசு. குறிஞ்சி

புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் றோன்று நாடன்
தீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்

(பி - ம்) 1. செழுங்குரல். 2. மெய்த்துற்று. 3. நினைப்பாகின்றே.

நெய்பெய் தீயி னெதிர்கொண்டு
தாமளந் தனையமென விடுகந் தூதே.

என்பது தலைமகன் தூது கண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது.

கபிலர்

கoள. மருதம்

குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்
கடிநவைப் படூஉ இயரோ நீயே நெடுநீர்
யாண ரூரன் றன்னொடு
வதிந்தவெம் மின்றுயி லெடுப்பி யோயே.

என்பது பொருண் முடித்துவந்த தலைமகனையுடைய கிழத்தி காம மிக்க கழிபடர் கிளவியாற் கூறியது. **மதுரைக்கண்ணனார்**

கoஅ. முல்லை

மழைவிளை யாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயிற் படரப் புறவிற்
பாசிலை முல்லை யாசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்
றுய்யேன் போல்வ றோழி யானே.

என்பது பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

வாயிலான்றேவன்

கoகூ. நெய்தல்

முட்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை[1] தரூஉந் துறைவன்
புணரிய விருந்த ஞான்றும்
இன்னது மன்னோ நன்னுதற் கவினே.

(பி - ம்) 1. மிகுதிரை.

என்பது தலைவன் சிறைப்புறமாகத் தலைவி வேறுபாடு கண்ட புறத்தார் அலர் கூறுகின்றமை தோன்றத் தோழி தலைமகட்குக் கூறுவாளாய்க் கூறியது. நம்பி குட்டுவன்

கக0. முல்லை

வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி நீர்நிலைப்
பைம்போ தளரிப் புதன்மலி யொண்பொறிக் கருவிளை[1]
நுண்முள் வீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னு வெறிதரும் வாடையோ
டென்னு யினள்கொ லென்னு மோரே.

என்பது பருவங் கண்டழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

தலைமகனைக் கொடுமை கூறித் தலைமகளைத் தோழி வற்புறுத்தியதூஉமாம். கிள்ளிமங்கலங்கிழார்

கககூ. குறிஞ்சி

மென்றோ ணெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவே ளென்னு மன்னையும்
அதுவென வுணரு மாயி னாயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
கேழிருந் துறுகற் செழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

என்பது வரைவு நீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறியெடுப்பக் கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

தீன்மதிநாகன்[2]

(பி - ம்) 1. கருவிளையாட்டி. 2. தின்மிதிநாகன்.

கக௨. குறிஞ்சி

கௌவை யஞ்சிக் காம மெய்க்கும்
எள்ளற விடினே யுள்ளது நாணே
பெருங்களிறு வாங்க முரிந்து நிலம்படாஅ
நாருடை யொசிய லற்றே
கண்டிசிற் றோழியவ ருண்டவென் னலனே.

என்பது வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. ஆலத்தூர்கிழார்

ககங. மருதம்

ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்லதி யாவதுந்
துன்னல் போகின்றாற் பொழிலே யாமெங்
கூழைக் கேர்மணங் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

என்பது பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினாற் குறியிடம் பெயர்த்துச் சொல்லியது. மாதீர்த்தன்

ககச. நெய்தல்

நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பினென்
னின்குறி வந்தனெ னியறேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வல்கலும்
ஆர லருந்தும் வயிற்ற
நாரை மிதிக்கு மென்மக ளுதலே.

என்பது இடத்துய்த்து நீங்குந் தோழி தலைமகற்குக் கூறியது.
பொன்னாகன்

ககரு. குறிஞ்சி

பெருநன் றாற்றிற்[1] பேணாரு முளரே
ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்[2]

(பி - ம்) 1. *பெருநன் றென்றிற்.* 2. *புரிமாண்டு.*

அடுபுலவி தீர[1] வளிமதி யிலைகவர்
பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்னல திலளே.

என்பது உடன்போக்கு ஒருப்படுத்து மீளுந் தோழி தலைமகற்குக் கூறியது.

கபிலர்

கககூ. குறிஞ்சி

யானயந் துறைவோ டேப்பாய் கூந்தல்
வளங்கெழு சோழ ருறந்தைப் பெருந்துறை
நுண்மண லறல்வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே நறுந்தண் ணியவே

என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

இளங்கீரன்

ககஎ. நெய்தல்

மாரி யாம்ப லன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவர லீர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇய ரண்டர்
கயிறரி பெருந்திறத் தழுந்துந் துறைவன்
வாரா தமையினு மமைக
சிறியவு முளவீண்டு விலைஞர்கை வளையே.

என்பது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

குன்றியனார்

ககஅ. நெய்தல்

புள்ளு மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலை
பலர்புகு வாயி லடையக் கடவுநர்

(பி - ம்) 1. புலவிதீர

வருவி ருளீரோ வெனவும்
வாரார் தோழிநங் காத லோரே.

என்பது வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுது கண்டு தோழிக்குச் சொல்லியது. நன்னாகையார்

கககூ. குறிஞ்சி

சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையண் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் கையளெம் மணங்கி யோளே.

என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் பாங் கற்கு உரைத்தது. சத்திநாதனார்

க௨0. குறிஞ்சி

இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி
நல்லா ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே.

என்பது அல்லகுறிப்பட்டு மீளுந் தலைம்கன் தன் நெஞ்சிற்குச் சொல் லியது.

இஃது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிந்த வழிக் கலங்கியதூஉமாம். பரணர்

க௨க. குறிஞ்சி

மெய்யோ வாழி தோழி சாரல்
மைப்பட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
தான்குறி வாராத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே.

என்பது இரவுக்குறி வந்த தலைமகன் செய்யுங் குறி பிறிதொன்றா னிகழ்ந்து மற்றவன் குறியை ஒத்தவழி அவ்வொப்புமையை மெய்ப்பொருளாக உணர்ந்து சென்று ஆண்டு அவனைக் காணாது மயங்கிய தலைமகள் பின்னர் அவன் வரவுணர்த்திய தோழிக்குக் கூறியது. கபிலர்

கஉஉ. நெய்தல்

பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீ ராம்பலுங் கூம்பின வினியே
வந்தன் றுவாழியோ மாலை
ஒருதா னன்றே கங்குலு முடைத்தே

என்பது தலைமகள் பொழுதுகண்டு அழிந்தது. ஓரம்போகியார்

கஉங. நெய்தல்

இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழுநிழல்
நிலவு குவித்தன்ன வெண்மண லொருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே.

என்பது பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணாத தோழி அவன் சிறைப்புறத்தானாதல் அறிந்து தலைமகட்குச் சொல்லியது.

ஐயூர்முடவன்

கஉச. பாலை

உமணர், சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா
டின்னா வென்றி ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே.

என்பது புணர்ந்து உடன்போக்கினைத் தலைமகளொழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ

கஉரு. நெய்தல்

இலங்குவளை நெகிழச் சாஅ யானே
உளெனே வாழி தோழி சாரல்
தழையணி யல்குன் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டவென் னலனே பழவிறற்
பறைவலந் தப்பிய பைத ஞரை
திரைதோய் வாங்குசினை யிருக்குந்
தண்ணந் துறைவனொடு கண்மா றின்றே.

என்பது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குக் கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகச் சொல்லியது. அம்மூவனார்

கஉசு. முல்லை

இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவணரோ வென்ப
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

என்பது பருவங் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது. ஒக்கூர் மாசாத்தியார்

கஉஎ. மருதம்

குருகுகொளக் குளித்த கெண்டை யயல
துருகெழு தாமரை வான்முகை வெரூஉங்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர
ஒருநின் பாணன் பொய்ய னாக
உள்ள பாண ரெல்லாங்
கள்வர் போல்வர்நீ யகன்றிசி னோர்க்கே

என்பது பாணன் வாயிலாகப் புக்கவழித் தலைமகற்குத் தோழி சொல்லியது. ஓரம்போகியார்

கஉ௯. குறிஞ்சி

குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
அயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி
நோய நெஞ்சே நோய்ப்பா லோயே.

என்பது அல்லகுறிப்பட்டு மீளுந் தலைமகன் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது.

இஃது 'உணர்ப்புவயின் வாரா வூடற்கண்' தலைமகன் கூறியதூஉமாம். பரணர்

கஉ௯. குறிஞ்சி

எனுவ சிறாஅ ரெம்முறு[1] நண்ப
புலவர் தோழ கேளா யத்தை
மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப்
பசுவெண்[2] டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற்றா லெம்மே.

என்பது தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

கோப்பெருஞ் சோழன்

கஙO. பாலை

நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி னாட்டி னூரி னூரின்
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரு முளரோநங் காத லோரே.

என்பது பிரிவிடை யழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது:— நீ அவர் பிரிந்தார் என்று ஆற்றயாகின்றதென்னை? யான் அவர் உள்

(பி - ம்) 1. ரெம்முறு. 2. பகுவெண்.

வழி அறிந்து தூதுவிட்டுக் கொணர்வேன்; நின் ஆற்றாமை நீங்குக எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

தோழி தூதுவிடுவாளாகத் தலைமகள் தனது ஆற்றாமையாற் கூறியதூஉமாம். வெள்ளிவீதியார்

கருக. பாலை

ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமர்க் கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சே ணாரிடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்
தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன் றாலோ யானே.

என்பது வினைமுற்றிய தலைமகன் பருவ வரவின்கட் சொல்லியது.

நக்கீரர்

கருஉ. குறிஞ்சி

கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்
குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே
யாங்குமறந் தமைகோ யானே ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்லா னடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பி னன்ன
சாஅய் நோக்கினள் மாஅ யோளே.

என்பது கழற்றெதிர்மறை. சிறைக்குடியாந்தையார்

கருரு. குறிஞ்சி

புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கிளிகுறைத் துண்ட கூழை யிருவி
பெரும்பெய லுண்மையி னிலையொலித் தாஅங்கென்
உரஞ்செத்து முள்ளேன் றோழியென்
நலம்புத் துண்ட புலம்பி னானே.

என்பது வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் சொல்லியது.
உறையூர் முதுகண்ணன் சாத்தன்

கருசு. குறிஞ்சி

அம்ம வாழி தோழி நம்மொடு
பிரிவின் றாயி னன்றுமற் றில்ல
குறும்பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொரு திரங்குங் கதம்வீ ழருவி
நிலங்கொள் பாம்பி னிழிதரும்
விலங்குமலை நாட னொடு கலந்த நட்பே.

என்பது வரைவிடை ஆற்றளாகிய தலைமகள் ஆற்றுவிக்குந் தோழிக்குச் சொல்லியது. கோவேங்கைப் பெருங்கதவன்

கருரு. பாலை

வினையே யாடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவ ருயிரென
நமக்குரைத் தோருந் தாமே
அழாஅ றோழி யழுங்குவர் செலவே.

என்பது தலைமகன் பிரியுமென வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது. பாலைபாடிய பெருங்கடுங்கோ

கருகூ. குறிஞ்சி

காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நுணங்கிக்
கடுத்தலுந் தணித்தலு மின்றே யானை
குளகுமென் றாண்மதம் போலப்
பாணியு முடைத்தது காணுநர்ப் பெறினே.

என்பது தலைமகன் பாங்கற்கு உரைத்தது. மிளைப்பெருங்கந்தன்

கருஎ. பாலை

மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப
நிற்றுறந் தமைகுவெ னாயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே.

என்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சம் உரைத்தது. பாலைபாடிய பெருங்கடுங்கோ

கருஅ. குறிஞ்சி

கொன்னூர் துஞ்சினு மியாந்துஞ் சலமே
எம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

என்பது குறிபிழைத்த தலைமகன் பிற்றைஞான்று இரவுக்குறி வந்துழித் தோழி சிறைப்புறமாகக் கூறியது. இரவுக்குறி நேர்ந்ததூஉமாம். கொல்லனழிசி

கருகூ. மருதம்

மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின மாலை யுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇப்
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
கின்னா திசைக்கு மம்பலொடு
வாரல் வாழிய ரையவெந் தெருவே.

என்பது வாயில் வேண்டிப் புக்க தலைமகற்குத் தோழி வாயின் மறுத்தது. ஒக்கூர் மாசாத்தியார்

கசo. பாலை

வேதின வெரிநி னோதி முதுபோத்
தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்துஞ்

சுரனே சென்றனர் காதல ருரனமீந்
தீங்கியான் றுங்கிய வெவ்வம்
யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே.

என்பது பொருள்வயிற் பிரிந்தவிடத்து நீ ஆற்றுகின்றிலை யென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. அள்ளூர் நன்முல்லை.

கசக. குறிஞ்சி

வளைவாய்ச் சிறுகிளி விளைதினை கடீஇயர்[1]
செல்கென் றோளே யன்னை சேனெனச்[2]
சொல்லி னெவனோ தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
குறுங்கை யிரும்புலிக் கோலைவல்[3] *லேற்றைப்*
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி
சார னாடீ வாரலோ வெனவே.

என்பது இற்செறிக்கப்பட்டுழி இரவுக்குறி வந்தொழுகுந் தலைமகற்கு வரும் ஏதமஞ்சிப் பகற்குறிநேர்ந்த வாய்பாட்டான் அதுவும் மறுத்துச் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. மதுரைப் பெருங்கொல்லன்

கசஉ. குறிஞ்சி

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தன்றோ[4] *விலளே பாணட்*
பள்ளி யானையி னுயிர்ததென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே.

என்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் சொல்லியது.

தோழிக்குத் தலைமகன் தன்குறை கூறியதூஉமாம். கபிலர்

(பி - ம்) 1. கடிய. 2. எனக். 3. கோள்வல. 4. தானறிந்தனளோ.

கசங. குறிஞ்சி

அழிய லாயிழை யிழிபுபெரி துடையன்
பழியு மஞ்சும் பயமலை[1] நாடன்
நில்லா மையே நிலையிற் றாகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற்[2] குரிய தன்றுநின்
அங்கலுழ் மேனிப் பாஅய பசப்பே.

என்பது வரைவிடைவைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

கசச. பாலை

கழியிற்[3] காவி குற்றுங் கடல
வெண்டலைப் புணரி யாடியு நன்றே
பிரிவி லாய முரியதொன் றயர
இவ்வழிப் படுதலு மொல்லா ளவ்வழி
பரல்பாற் படுப்பச் சென்றனண் மாதோ
சேண்மழை தவழுஞ் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாடே.

என்பது மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

மதுரையாசிரியன் கோடங்கொற்றன்

கசரு. நெய்தல்

உறைபதி யன்றித் துறைகெழு சிறுகுடி
கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி
ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்

(பி - ம்.) 1. பழமலை. 2. தூங்குதற். 3. கழிய.

துஞ்சா துறைநரோ சோவாத்
துயில்கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்தே.

என்பது வரைவிடை ஆற்றது தோழிக்குத் தலைமகள் சொல்லி யது.

கொல்லனழிசி

கசசு. குறிஞ்சி

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்பவ ரிருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்றுபெரி தென்னு மாங்கண தவையே.

என்பது தலைமகன் றமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி வரைவு மறுப்பவோவெனக் கவன்ற தலைமகட்குத் தோழி சொல் லியது.

வெள்ளிவீதியார்

கசஎ. பாலை

வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன
மயிரோ லொழுகிய வங்கலுழ் மாமை[1]
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்றுயி லெடுப்புதி கனவே
எள்ளா ரம்ம துணைப்பிரிந் தோரே.

என்பது தலைமகன் பிரிந்த விடத்துக் கனாக்கண்டு சொல்லியது.

கோப்பெருஞ்சோழன்

கசஅ. முல்லை

செல்வச் சிறாஅர் சிறடிப் பொலிந்த
தவளை வாஅய பொலஞ்செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை

(பி - ம்.) 1. *மாயை.*

குருந்தோ டலம்வரும்[1] பெருந்தண் காலையும்
காரன் றென்றி யாயிற்[2]
கனவோ மற்றிது வினவுவல் யானே.

என்பது பருவங்கண்டழிந்த தலைமகளைத் தோழி பருவமன்றென்று வற்புறுத்தத் தலைமகள் சொல்லியது. இளங்கீரந்தையார்

கசகூ. பாலை

அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறைத்
தீம்புன னெரிதர வீந்துக் காஅங்குத்
தாங்கு மளவை தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாதே.

என்பது உடன்போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. வெள்ளிவீதியார்

கரு௦. குறிஞ்சி

சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயி னிமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுல ரகலம்
உள்ளி னுண்ணோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்.

என்பது இரவுக்குறி நேர்ந்த தோழிக்குத் தலைமகள் கூறியது. மாடலூர்கிழார்

கருக. பாலை

வங்கர்க்[3] கடந்த செங்காற் பேடை
எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணாது

(பி - ம்.) 1. அலமரும். 2. காரெனத் தேருயாயின். 3. வங்கா.

குழலிசைக் குரல குறும்பல வகவுங்
குன்றுறு சிறுநெறி யரிய வென்னாது
மறப்பருங் காதலி யொழிய
இறப்ப லென்பதீண் டின்மைக்கு முடிவே.

என்பது பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

தூங்கலோரி

கருஉ. குறிஞ்சி

யாவது மறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தே
யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே.

என்பது வரைவு நீட்டித்தவழி ஆற்றளாகிய தலைமகள் நீ ஆற்று கின்றிலை யென்று நெருங்கிய தோழிக்குச் சொல்லியது.

கிள்ளிமங்கலம்[1] கிழார்

கருரூ. குறிஞ்சி

குன்றக் கூகை குழறினு முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்
அஞ்சும னளித்தென் னெஞ்ச மினியே
ஆரிருட் கங்கு லவர்வரிற்
சார னீளிடைச் செலவா னாதே.

என்பது வரையாது நெடுங்காலம் வந்தொழுகுகின்றுழி நாம் அவரை வேறுபடுத்தற்குக் காரண மென்னை யென்ற தோழிக்கு அவர் வரவு நமது ஆற்றமைக்குக் காரணமாம் எனத் தலைமகள் கூறியது.

கபிலர்

கருச. பாலை

யாங்கறிந் தனர்கொ றோழி பாம்பின்
உரிநிமிர்ந் தன்ன வுருப்பவி ரமையத்

(பி - ம்.) 1. *கிளிமங்கலம், இப்பெயர் வருமிடங்களில் இவ்வாறே கொள்க.*

திரைவேட் டெழுந்த சேவ லுள்ளிப்
பொறிமயி ரெருத்திற் குறுநடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகா யங்கவட்டுத்
தயங்க விருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பிற் கானம்
பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே.

என்பது பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்து தலைமகள் தோழிக்கு உரைத்தது. மதுரைச் சீத்தலைச் சாத்தன்

கருரு. முல்லை

முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே மெழுகான்
றாதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயி லிறும்பி னார்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந் தயர்வர்
தேர்வரு மென்னு[1] முரைவா ராதே.

என்பது தலைமகள் பருவங்கண்டு அழிந்து சொல்லியது.
ஓரோடகத்துக் கந்தரத்தனார்

கருகூ. குறிஞ்சி

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கி னன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பி னின்சொ லுள்ளும்

(பி - ம்.) 1. என்னுமுன்.

பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ மயலோ விதுவே.

என்பது கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறியது.

பாண்டியன் ஏறுதி நெடுங்கண்ணன்

கருஎ. மருதம்

குக்கூ வென்றது கோழி யதனெதிர்
துட்கென் றன்றென் றூஉ[1] நெஞ்சம்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன்றா லெனவே.

என்பது பூப்பெய்திய தலைமகள் உரைத்தது. அள்ளூர் நன்முல்லை

கருஅ. குறிஞ்சி

நெடுவரை மருங்கிற் பாம்புபட விடிக்கும்
கடுவிசை யுருமின் கழறுகுர லளைஇக்
காலொடு வந்த கமஞ்சூன் மாமழை
ஆரளி யிலையோ நீயே பேரிசை
இமையமுந் துளக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரிஃ தெவனே.

என்பது தலைமகன் இரவுக்குறி வந்துழி அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. ஔவையார்

கருகூ. குறிஞ்சி

தழையணி யல்கு றுங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
அம்மெல் லாக நிறைய வீங்கிக்
கொம்மை வருமுலை[2] செப்புட னெதிரின

(பி - ம்.) 1. தூய. 2. வரிமுலை.

யாங்கா குவள்கொல் பூங்குழை யென்னும்
அவல நெஞ்சமோ டுசாவாக்
கவலை மாக்கட்டிப் பேதை யூரரே.

என்பது தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுத்தது.

உயிர் செலவேற்று வரைவுவரினும் அது மாற்றுதற்கு நிகழ்ந்த தூஉமாம்.

வடமவண்ணக்கன் பேரிசாத்தன்

கசுo. குறிஞ்சி

நெருப்பி னன்ன செந்தலை யன்றில்
இறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவி னோங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலு நள்ளென் யாமத்துப்
பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழிநங் காதலர் வரவே.

என்பது வரைவு நீட்டிப்ப ஆற்றுளாகிய தலைமகளை நோக்கித் தோழி வரைவரேன ஆற்றுவிப்புழித் தலைமகள் கூறியது.

மதுரை மருத னிளநாகனுர்

கசுக. குறிஞ்சி

பொழுது மெல்லின்று பெயலு மோவாது
கழுதுகண் பனிப்ப வீசு மதன்றலைப்
புலிப்பற் றாலிப் புதல்வர்ப் புல்லி
அன்னா யென்னு மன்னையு மன்னோ
என்மலைந் தனன்கொ றானே தன்மலை
ஆர நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே.

என்பது இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் காப்பு மிகுதியான் எதிர்ப்படப்பெறாத தலைமகள் பிற்றைஞான்று தலைமகன்

சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. நக்கீரர்

கசுஉ. முல்லை

கார்புனந் தந்த நீருடை வியன்புலத்துப்[1]
பலர்புகு தரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே.

என்பது வினைமுற்றி மீளுந் தலைமகன் முல்லைக்கு உரைப்பானும் உரைத்தது. கருவூர்ப் பவுத்திரன்

கசுங. நெய்தல்

யாரணங் குற்றனை கடலே பூழியர்[2]
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழைத் திரையலை
நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே.

என்பது நன்னுட் கையாறெய்திடு கிளவி. அம்மூவனார்

கசுச. மருதம்

கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூல் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் நீம்பழங் கதூஉந்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணாது
தண்பெரும் பௌவ மணங்குக தோழி
மனையோள் மடமையிற் புலக்கும்
அனையே மகிழ்நற்கியா மாயின மெனினே.

(பி - ம்.) 1. புனத்து 2. பூழி.

என்பது காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினர் கேட்ப உரைத்தது.

மாங்குடி மருதன்

கசுரு. குறிஞ்சி

மகிழ்ந்ததன் றலையு நறவுண் டாங்கு
விழைந்ததன் றலையு நீவெய் துற்றனை
இருங்கரை நின்ற வுப்பொய் சகடம்
பெரும்பெயற் றலையவிந் தாங்கிவள்
இரும்பல் கூந்த லியலணி கண்டே.

என்பது பின்னின்ற தலைமகன் மறுக்கப்பட்டுப் பெயர்ந்ததுங் கூட லுறும் நெஞ்சிற்குச் சொல்லியது.

பரணர்

கசுசு. நெய்தல்

தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்
ஊரோ நன்றுமன் மாந்தை[1]
ஒருதனி வைகிற் புலம்பா கின்றே.

என்பது காப்பு மிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது.

கூடலூர்கிழார்

கசுஎ. முல்லை

முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.

என்பது கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்கு உரைத்தது.

கூடலூர்கிழார்

(பி - ம்.) 1. மாநகை.

கசு௫. பாலை

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே நன்மா மேனி
புனற்புணை யன்ன சாயிறைப் பணைத்தோண்
மணத்தொறுந் தணத்தலு மிலமே
பிரியின் வாழ்த லதனினு மிலமே.

என்பது பொருள்வலிக்கும் நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

சிறைக்குடி யாந்தையார்

கசுகூ. மருதம்

சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டின்
தெற்றென விறீஇயரோ வைய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே.

என்பது கற்புக்காலத்துத் தோழி வாயில் மறுத்தது; தலைவி வாயின் மறுத்ததூஉமாம்.

இனித், தோழி வரைவு நீட்டித்தவழி வரைவு கடாயதூஉ மாம்.

வெள்ளிவீதியார்

க௭௦. குறிஞ்சி

பலருங் கூறுகவஃ தறியா தோரே
அருவி தந்த நாட்குர லெருவை
கயனு டியானை கவள மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோ காமைநற் கறிந்தனென் யானே.

என்பது வரைவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது. கருவூர்கிழார்

களக. மருதம்

காணினி வாழி தோழி யாணர்க்
கடும்புன லடைகரை நெடுங்கயத் திட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்
கிதுமற் றெவனோ தொதுமலர் தலையே.

என்பது இதுவுமது. பூங்கணுத்திரையார்

களஉ. நெய்தல்

தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுண் மாலை
எமிய மாக வீங்குத் துறந்தோர்
தமிய மாக வினியர் கொல்லோ
வேளூர்ப் பொதுவினைக் கோளூர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம் பறியாது வருந்துமென் னெஞ்சே.

என்பது இதுவுமது. கச்சிப்பேட்டு நன்னாகையார்

களஈ. குறிஞ்சி

பொன்னே'ராவிரைப் புதுமலர் மிடைந்த
பன்னூன் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க வேறி நாணடப்
பழிபட ருண்ணோய் வழிவழி சிறப்ப
இன்னாள் செய்த திதுவென முன்னின்
றவள்பழி நுவலு மிவ்வூர்
ஆங்குணர்ந் தமையினீ ரேகுமா ருளனே.

என்பது துறை மறுக்கப்பட்ட தலைமகன் தோழிக்கு உரைத்தது.
மதுரைக் காஞ்சிப்புலவன்

கஎச. பாலை

பெயன்மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுடக் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் றூவித் துணைப்புற விரிக்கும்
அத்த மரியவென் னூர்நத் துறந்து
பொருள்வயிற் பிரிவா ராயினிவ் வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற·வாருமில் லதுவே.

என்பது பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

வெண்பூதி

கஎரு. நெய்தல்

பருவத் தேனசைஇப் பல்பறைத் தொழுதி
உரவுத்திரை பொருத திணிமண லடைகரை
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்
கிரங்கேன் றோழி யீங்கென லேன்று
பிறர்பிற ரறியக் கூறல்
அமைத்தாங் கமைக வம்பலவ் தெவனே.

என்பது பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லி வற்புறுத்துவாட்குக் கிழத்தி யுரைத்தது.

உலோச்சனுர்

கஎசு. குறிஞ்சி

ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
நன்னர் நெஞ்ச நெகிழ்ந்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ

வேறுபுல னன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலுழுமென்[1] னெஞ்சே.

என்பது தோழி கிழத்தியைக் துறைநயப்பாக் கூறியது.

வருமுலையாரித்தி

கஎஎ. நெய்தல்

கடல்பா டவிந்து கானன் மயங்கித்
துறைநீ ரிருங்கழி புல்லென் றன்றே
மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலு மின்றவர்
வருவர்கொல் வாழி தோழி நாகப்
புலப்பினும் பிரிவாங் கஞ்சித்
தணப்பருங் காமந் தண்டி யோரே.

என்பது கிழவன் வரவுணர்ந்து தோழி கிழத்திக்கு உரைத்தது.

உலோச்சனர்

கஎஅ. மருதம்

அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர்ந்த[2] தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே.

என்பது கடிநகர்புக்கதோழி தலைமகன் புணர்ச்சிவிதும்பல் கண்டு முன்னர்க் களவுக் காலத்து ஒழுகலாற்றினை நினைந்து அழிந்து கூறியது.

நெடும்பல்லியத்தை

(பி - ம்.) 1. கழுலு 2. மலர்.

கஎகூ. குறிஞ்சி

கல்லென் கானத்துக் கடமா வாட்டி
எல்லு மெல்லின்று ஞமலியு மிளைத்தன
செல்ல லைஇய வுதுவெம் மூரே
ஓங்குவரை யடுக்கத்துத் தீந்தேன் கிழித்த
குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே.

என்பது பகல் வருவானை இரவுக்குறி நேர்ந்தாள்போன்று வரைவு கடாயது.

துட்டுவன்கண்ணன்

கஅ௦. பாலை

பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி
இருங்களிற் றினநிரை யேந்தல் வரின்மாய்ந்
தறைமடி கரும்பின் கண்ணிடை யன்ன
வைக லொருகழை நீடிய சுரனிறந்
தெய்தினர் கொல்லோ பொருளே யல்குல்
அவ்வரி வாடத் துறந்தோர்
வன்ப ராகத்தாஞ் சென்ற நாட்டே.

என்பது பிரிவிடை வேறுபட்டாளைத் தோழி வற்புறுத்தியது.

கச்சிப்பேட்டு நன்னாகையார்

கஅக. மருதம்

இதுமற் றெவனோ தோழி துனியிடை
இன்ன ரென்னு மின்னாக் கிளவி
இருமருப் பெருமை யீன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியி னகலாது
பாஅற் பைம்பயி ராரு மூரன்

திருமணைப் பல்கடம் பூண்ட
பெருமுது பெண்டி ராகிய நமக்கே.

என்பது தலைமகன் பரத்தையிற் பிரிந்தவழி ஆற்றளாகிய தலைமகள் ஆற்றல்வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது. கிள்ளிமங்கலங்கிழார்

கூஉ. குறிஞ்சி

விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மார்பிற் பூட்டி
வெள்ளென் பணிந்துபிற ரெள்ளத் தோன்றி
ஒருநாண் மருங்கிற் பெருநா ணீங்கித்
தெருவி னியல்வு[1] தருவது கொல்லோ
கலிந்தவி ரசைநடைப் பேதை
மெலிந்தில ளும்விடற் கமைந்த தூதே.

என்பது தோழியாற் குறைமறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைத்தது. மடல்பாடிய மாதங்கீரன்

கூஙு. முல்லை

சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ
நம்போற் பசக்குங் காலைத் தம்போற்
சிறுதலைப் பிணையிற் றீர்ந்த நெறிகோட்
டிரலை மானையுங் காண்பர்கொ னமரே
புல்லென் காயாப் பூக்கெழு[2] பெருஞ்சினை
மென்மயி லெருத்திற் றோன்றுங்
கான வைப்பிற் புன்புலத் தானே.

என்பது பருவ வரவின்கண் ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. ஔவையார்

(பி - ம்.) 1. இயலவும். 2. புக்கெழு.

கஉசு. நெய்தல்

அரிகரி பொய்த்த லான்றோர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்ட தென்னா ததற்பட்
டாண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்சம்
மயிற்கண் ணன்ன மாமுடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉங் கான லானே.

என்பது கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன்

கஉரு. குறிஞ்சி

நுதல்பசப் பிவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடிநெகிழ்ந்
தின்ன ளாகுத னும்மி னாகுமெனச்
சொல்லி னெவனோ தோழி பல்வரிப்
பாம்பு பையவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலிற் றொலைந்த வொண்செங் காந்தள்
கன்மிசைக் கவியு நாடற்
கென்னமர் மேனி யழிபடர் நிலையே.

என்பது தலைமகன் இராவந்து ஒழுகாநின்ற காலத்து வேறுபட்ட தலைமகளை வேறுபட்டாயால் என்றற்குக் கிழத்தி உரைத்தது.

மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்

கஉசு. முல்லை

ஆர்கலி யாற்றொடு[1] கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி

(பி - ம்.) 1. *ஏற்றொடு.*

எயிறென முகைக்கு நாடற்குத்
துயிறுறந் தனவாற் றோழியெங் கண்ணே.

என்பது பருவ வரவின்கண் ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. ஒக்கூர்மாசாத்தியார்.

௧௮௭. குறிஞ்சி

செவ்வரைச் செச்சை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பா லார மாந்திப்
பெருவரை நீழ லுகளு நாடன்
கல்லினும் வலியன் றோழி
வலியனென் னாது மெலியுமென் னெஞ்சே.

என்பது வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது. கபிலர்

௧௮௮. முல்லை

முகைமுற் றினவே முல்லை முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்
வாலிழை நெகிழ்த்தோர் வாரார்
மாலைவந் தன்றென் மாணலங் குறித்தே.

என்பது பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது.

மதுரை அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனார்.

௧௮௯. பாலை

இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி

விசும்புவீழ்[1] கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்[2]
காலியற் செலவின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணாகம் மணந்துவக் குவமே.[3]

என்பது வினை தலைவைக்கப்பட்டிடத்துத் தலைமகன் பாகற்கு உரைத்தது மதுரை ஈழத்துப் பூதன்றேவன்

கக0. முல்லை

நெறியிருங் கதுப்பொடு பெருந்தோ ணீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட் ககன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி பொறிவரி
வெஞ்சின வரவின் பைந்தலை துமிய
மாவுரு[4] முரறு மரையிரு ணடுநாள்
நல்லே றியங்குதோ றியம்பும்
பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே.

என்பது பிரிவிடை ஆற்றளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. பூதம்புல்லன்

கககக. முல்லை

உதுக்கா ணதுவே யிதுவென மொழிகோ
நோன்சினை யிருந்த விருந்தோட்டுப் புள்ளினந்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ள
தீங்குர லகவக் கேட்டு நீங்கிய
ஏதி லாள ரிவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் புனையல்
எம்முந் தொடாஅ லென்குவ மன்னே.

(பி - ம்.) 1. வீசு. 2. துமிய 3. அடைந்துவகும்மே. 4. வரவுறு.

என்பது பிரிவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி கூறி யது.

கசஉ. பாலை

ஈங்கே வருவ ரினைய லவரென
வழாஅற் கோவினிய நோய்நொந் துறைவி
மின்னின் றூவி யிருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வருங்குரற் கூந்த றைவரு வேனே.

என்பது பிரிவிடை வற்புறுத்த வன்புறை எதிரழிந்து கிழத்தி உரைத் தது. **கச்சிப்பேட்டு நன்னாகையார்**

கசங. முல்லை

மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
விட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்
தொல்லைத் திங்க ணெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெனந் தோளே
இன்று முல்லை முகைநா றும்மே.

என்பது தோழி கடிநகர் புக்கு நலந் தொலையாமை நன்காற்றினாய் என்றாட்குக் கிழத்தி யுரைத்தது. **அரிசில்கிழார்**

கசச. முல்லை

என்னெனப் படுங்கொ றோழி மின்னுவா
வலமேனர் பிறங்கு மென்றோ டதனெதிர்
கான மஞ்ஞை கடிய வேங்கும்
ஏதில கலந்த விரண்டற்கென்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே.

என்பது பருவ வரவின்கண் ஆற்றளாமெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.
கோவத்தன்

கசுரு. நெய்தல்

சுடர்சினந் தணிந்து குன்றஞ் சேரப்
படர்சுமந் தெழுதரு பையுண் மாலை
யாண்டுளர் கொல்லோ வேண்டுவினை முடிநர்
இன்ன திரங்கு மென்னா ரன்னோ
தைஇ யசைவளி மெய்பாய்ந் தூர்தரச்
செய்வுறு பாவை யன்னவென்
மெய்பிறி தாகுத லறியா தோரே.

என்பது பிரிவிடைப் பருவ வரவின்கட் கிழத்தி மெலிந்து கூறியது.
தாமோதரன்[1]

கசுசு. மருதம்

வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்[2]
வெய்ய வுவர்க்கு மென்றனிர்
ஐய வற்றா லன்பின் பாலே.

என்பது வாயில் வேண்டிப் புக்க கிழவற்குத் தோழி கூறியது.
மிளைக்கந்தன்

கசுஎ. நெய்தல்

யாதுசெய் வாங்கொ றோழி நோதக
நீரெதிர் கருவிய காரெதிர் கிளைமழை

(பி - ம்.) 1. தோதான். 2. அதுவே.

ஊதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதி ருருவிற் கூற்றம்
காதலர்ப் பிரிந்த வெற்குறித்து வருமே.

என்பது பருவ வரவின்கண் வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது. கச்சிப்பேட்டு நன்னாகையார்

கக௱௪. குறிஞ்சி

யாஅங்[1] கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்னபால் வார்பு
கரிக்குறட் டிறைஞ்சியற்[2] செறிகோட் பைங்குரற்
படுகிளி கடிகஞ் சேறு மடுபோர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க[3] தில்ல வருகுவள் யாயே.

என்பது தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது. கபிலர்

கக௱௫. குறிஞ்சி

பெறுவ தியையா தாயினு முறுவதொன்
றுண்டுமன் வாழிய நெஞ்சே திண்டேர்க்
கைவள் ளோரி கானந் தீண்டி
எறிவளி கமழு நெறிபடு கூந்தன்
மையீ ரோதி மாஅ யோள்வயின்
இன்றை யன்ன நட்பி னின்னோய்
இறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே.

(பி - ம்.) 1. மாஅம் 2. இறைஞ்சியற். 3. வாரன் மற்றை

என்பது தோழி செறிப்பறிவுறுப்ப நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

பரணர்

உ00. நெய்தல்

பெய்தகுன் றத்துப் பூநா றுதண்கலுழ்
நிலமிசை...ா.தா அய் வீசுமந்
திழிதரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவா நாமே
கால மாரி மாலை மாமலை
இன்னிசை யுருமின் குர லும்
முன்வர லேமஞ் செய்தகன் றோரே.

என்பது பருவ வரவின்கண் ஆற்றளாகிய தலைமகட்குத் தோழி பருவமன்று வம்பு என்றவழித் தலைமகள் சொல்லியது.

ஔவையார்.

உ0க. குறிஞ்சி

அமிழ்த முண்கநம் மயலிய்[1] லாட்டி
பால்கலப் பன்ன தேக்கொக் கருந்துபு
நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி யயலது
முள்ளி லம்பணை மூங்கிலிற் றூங்குங்
கழைநிவந் தோங்கிய சோலை
மலைகெழு நாடனை வருமென் றோளே.

என்பது கடிநகர் வேறுபடாது நன்காற்றினாய் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

உ0உ. மருதம்

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்

(பி - ம்.) 1. *மயிலியல், மயலி.*

கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதலர்
இன்னு செய்த னோமென் னெஞ்சே.

என்பது வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.
அள்ளூர் நன்முல்லை

உ0ங. மருதம்

மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரந்தலை தோன்று வூரரு மல்லர்
கண்ணிற் காண நண்ணுவழி யிருந்து
கடவு ணண்ணிய பாலோர் போல
வெரியி[1] னொழுகு மென்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே.

என்பது வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.
நெடும்பல்லியத்தை

உ0ச. குறிஞ்சி

காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதுச்சுவற் கலித்த முற்று விளம்புல்[2]
மூதாக் தைவந்[3] தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே[4].

என்பது தலைமகற்குப் பாங்கன் உரைத்தது. மிளைப்பெருங்கந்தன்

உ0ரு. நெய்தல்

மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப்
பொலம்படைப் பொலிந்த வெண்டே ரேறிக்

(பி. ம்.) 1. ஒரீஇ யொழுகும். 2. இளம்புனம். 3. மூதாதைவந். 4. உனக்கே.

கலங்குகடற் றுவலை யாழி நனைப்ப
இனிச்சென் றனனே யிடுமணற் சேர்ப்பன்
யாங்கறிந் தன்றுகொ றோழியென்
தேங்கமழ் திருநுத லூர்தரும் பசப்பே.

என்பது வரைவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. உலோச்சனார்

உ0சு. குறிஞ்சி

அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி
அன்ன வினியோள் குணனு மின்ன
இன்னா வரும்படர் செய்யு மாயின்
உடனுறை வரிதே காமம்
குறுக லோம்புமி னறிவுடை யோரே.

என்பது கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

ஐயூர் முடவன்

உ0எ. பாலை

செப்பினஞ் செலினே செலவரி தாகுமென்
றத்த வோமை யங்கவட் டிருந்த
இனந்தீர் பருந்தின் புலம்புகொ டெள்விளி
சுரஞ்செல் மாக்கட் குயவுத்துணை யாகும்
கல்வரை யயலது தோல்வழங்கு சிறுநெறி
நல்லடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் மார்வலர் பலரே.

என்பது செலவுக் குறிப்பறிந்து அவர் செல்லாரென்று தோழி சொல்லக் கிழத்தி உரைத்தது. உறையன்

உ0அ. குறிஞ்சி

ஒன்றே னல்லெ னொன்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை

குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனொ
டொன்றேன் றோழி யொன்றிற[1] னே.

என்பது வரைவிடை ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கபிலர்

உ௦௯. பாலை

சுரந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோளிடங் கரக்கும்
இறப்பருங் குன்ற மிறந்த யாமே
குறுநடைப் பலவுள் ளலமே நெறிமுதற்
களரிற் கவித்த முட்சினை வெட்சித்
தளையவிழ் பல்போது கமழும்
மையிருங் கூந்தன் மடந்தை நட்பே.

என்பது பொருண்முற்றி மறுத்தருந் தலைமகன் தோழிக்கு உரைப்பானாய்க் கிழத்தியைத் தெருட்டியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ

உக௦. முல்லை

திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் றோழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்வற்கு[2]
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

என்பது பிரிந்துவந்த தலைமகன் நன்காற்றி யிருந்தாய் என்றற்குத் தோழி உரைத்தது.

காக்கை பாடினியார் நச்செள்ளையார்

(பி - ம்.) 1. என்றிசின். 2. செல்வற்கு.

உகக. பாலை

அஞ்சி லோதி யாய்வளை நெகிழ
நொந்துநம் மருளார் நீத்தோர்க் கஞ்சல்
எஞ்சினம் வாழி தோழி யெஞ்சா
தீந்த[1] மராஅத் தோங்கல் வெஞ்சினை
வேனி லோரிணர் தேனொ டூதி
ஆரா துபெயருந் தும்பி
நீரில் வைப்பிற் சுரனிறந் தோரே.

என்பது இடைச்சுரத்துக் கவலுவன கண்டு நம்மை ஆற்றரென நினைந்து மீள்வர்கொல் எனக் கவன்ற கிழத்திக்குத் தோழி சொல்லியது.

காவன்முல்லைப் பூதனார்

உகஉ. நெய்தல்

கொண்க னூர்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
தெண்கட லடைகரை தெளிமணி யொலிப்பக்
காண வந்து நாணப் பெயரும்
அளிதோ தானே காமம்
விளிவது மன்ற நோகோ யானே.

என்பது துறைநேர்ந்த தோழி துறை நயப்பக் கூறியது.

நெய்தற்கார்க்கியார்

உகங. பாலை

நசைநன் குடையர் தோழி ஞெரேரெனக்[2]
கவைத்தலை முதுகலை காலி னொற்றிப்
பசிப்பிணிக் கிறைஞ்சிய பரூஉப் பெருந்தாரல்
ஒழியி னுண்டு வழீஇ னெஞ்சில்
தெறித்துநடை மரபிற்றன் மறிக்குநிழ லாகி
நின்றுவெயிற் கழிக்கு மென்பநம்
இன்றுயின் முனிநர் சென்ற வாறே.

(பி - ம்.) 1. *தீய்ந்த.* 2. *நேரோரெரன.*

என்பது நம்பெருமான் நம்பொருட்டு இடைநின்று மீள்வர் எனக் கவன்ற தலைமகட்குத் தோழி உரைத்தது.

கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றனா

உகச. குறிஞ்சி

மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து வித்திய
பிறங்குகுர லிறடி காக்கும் புறந்தாழ்
அஞ்சி லோதி யசையியற் கொடிச்சி
திருந்திழை யல்குற்குப் பெருந்தழை யுதவிச்
செயலை முழுமுத லொழிய வயல
தலை மாலை சூட்டி
ஏமுற் றன்றிவ் வழுங்க லூரே.

என்பது தோழி வெறியாட் டெடுத்துக்கொண்ட இடத்து அறத்தொடு நின்றது.

கூடலூர்கிழார்

உகரு. பாலை

படரும் பைப்பயப் பெயருஞ் சுடரும்
என்றாழ் மாமலை மறையு மின்றவர்
வருவர்கொல் வாழி தோழி நீரில்
வறுங்கயந் துழைஇய விலங்குமருப் பியானை
குறும்பொறை மருங்கி னமர்துணை தழீஇக்
கொடுவரி யிரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கிற் சுரனிறந் தோரே.

என்பது பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

மதுரை அளக்கர்ஞாழார் மகனார் மள்ளனார்

உகசு. பாலை

அவரே,
கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை

வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே,
தோடா ரெல்வளை ஞெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
அன்ன ளளிய ளென்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கும்
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே.

என்பது பருவ வரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கச்சிப்பேட்டு காஞ்சிக்கொற்றன்

உகஎ. பாலை

தினைகிளி கடிகெனிற் பகலு மொல்லும்
இரவுநீ வருதலி னூறு மஞ்சுவல்
யாங்குச்செய் வாமெம் மிடும்பை நோய்க்கென
ஆங்கியான் கூறிய வனைத்திற்குப் பிறிதுசெத்
தோங்குமலை நாட னுயிர்த்தோன் மன்ற
ஐதே கம்ம யானே
கழிமுதுக் குறைமையும் பழியுமென் றிசினே.

என்பது உடன்போக்கு நயப்பத் தோழி தலைமகட்குக் கூறியது.

தங்கால் முடக்கோவலனார்

உகஅ. பாலை

விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாங் கைந்நூல் யாவாம்
புள்ளு மோராம் விரிச்சியு நில்லாம்
உள்ளலு முள்ளா மன்றே தோழி
உயிர்க்குயி ரன்ன ராகலிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வலியோர் மாட்டே

என்பது பிரிவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கோற்றன்

௨௧௯. நெய்தல்

பசப்பென் மேனி யதுவே நயப்பவர்
நாரி னெஞ்சத் தாரிடை யதுவே
செறிவுஞ் சேணிகந் தன்றே யறிவே
ஆங்கட் செல்க மெழுகென வீங்கே
வல்லா கூறி யிருக்கு மள்ளிலைத்
தடவுநிலைத் தாழைச் சேர்ப்பற்
இடமற் றோழியென் னீரோ வெனினே.

என்பது சிறைப்புறம் — வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார்

௨௨௦. முல்லை

பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பருவீ மென்பிணிக்
குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசிற் றோழி பொருட்பிரிந் தோரே.

என்பது பருவ வரவின்கண் கிழத்தி தோழிக்கு உரைத்தது.

ஒக்கூர்மாசாத்தியார்

௨௨௧. முல்லை

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னி
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே.

என்பது பிரிவிடைப் பருவ வரவின்கண் வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

உறையூர் முதுகோற்றன்

உ௨உ. குறிஞ்சி

தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னோளே.

என்பது பெட்ட வாயில்பெற்று இரவு வலியுறுத்தது.

சிறைக்குடி யாந்தையார்

உ௨௩. குறிஞ்சி

பேரூர் கொண்ட வார்கலி விழவிற்
செல்வாஞ் செல்வா மென்றி யன்னல்லோர்
நல்ல பலவாற் றில்லே
தழலுந் தட்டையு முறியுந் தந்திவை
ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
அன்னை யோம்பிய வாய்நலம்
என்னைக் கொண்டான்யா மின்னமா லினியே.

என்பது வரைவிடை வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி கூறியது.

மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன்

உ௨௪. பாலை

கவலை யாத்த வவல நீளிடைச்
சென்றோர் கொடுமை யேற்றித் துஞ்சா
நோயினு நோயா கின்றே கூவல்

குராலான் படுதுய ரிரவிற் கண்ட
உயர்திணை யூமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் றோழி நோய்க்கே.

என்பது பிரிவிடை இறந்துபடுமெனக் கவன்ற தோழி கேட்பக் கிழத்தி உரைத்தது.
கூவன்மைந்தன்

உஉரு. குறிஞ்சி

கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தனை யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே.

என்பது வரைவிடை வைத்துப் பிரிவாற்றுத் தோழி சொல்லியது.
கபிலர்

உஉசு. நெய்தல்

பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்று
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

என்பது வரைவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.
மதுரை எழுத்தாளன் சேந்தன்பூதன்

உஉஎ. நெய்தல்.

பூவிடைக் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாண்முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த
கூழை நெய்தலு முடைத்திவட்
டேரோன் போகிய கான லானே.

என்பது சிறைப்புறம். ஓதஞானி

உஉஅ. நெய்தல்

வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை
குருகுள ரிடத்தின் விரிபுதோ டவிழும்
கான னண்ணிய சிறுகுடி முன்றில்
திரைவந்து பெயரு மென்பநத்[1] துறந்து
நெடுஞ்சே ணாட்டா ராயினும்
நெஞ்சிற் கணியரோ தண்கட னாட்டே.

என்பது கடிநகர் வேறுபடாது நன்காற்றினாய் என்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன்

உஉகூ. பாலை

இவனிவ ளைம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்கினள் பரியவுங்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லை மன்ற[2] பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே.

என்பது இடைச்சுரத்துக் கண்டார் தம்முள்ளே சொல்லியது. மோதாசனார்

(பி - ம்.) 1. என்பதந். 2. மன்றம்ம.

உ௩௦. நெய்தல்

அம்ம வாழி தோழி கொண்கன்
தானது துணிகுவ னல்லன் யானென்
பேதை மையாற் பெறுதகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ
வயச்சுறு வழங்கு நீர்த்தவச்
சின்னா ளின்ன வரவறி யானே.

என்பது வலிதாகக் கூறித் துறை நயப்பித்தது.

அறிவுடைநம்பி

உ௩க. மருதம்

ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்
சேரி வரினு மார முயங்கார்
ஏதி லாளர் சுடலை போலக்
காணாக் கழிப மன்னே நாணட்
நல்லறி விழந்த காமம்
வில்லுமிழ் கணையிற் சென்றுசேட் படவே.

என்பது வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ

உ௩உ. பாலை

உள்ளார் கொல்லோ தோழி யுள்ளியும்
வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ
மரற்புகா வருந்திய மாவெருத் திரலை
உரற்கா லியானை யொடித்துண் டெஞ்சிய
யாஅ விரிநிழற் றுஞ்சும்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

என்பது பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

ஊண்பித்தை

உ௲௫. முல்லை

கவலை கெண்டிய கல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே யுயர்ந்தோர்க்கு
நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகொள லறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே.

என்பது பட்டபின்றை வரையாது சென்று வினைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. பேயன்

உ௲௪. முல்லை

சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்
தெல்லுறு பொழுதின் முல்லை மலரும்
மாலை யென்மனார் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்
பெரும்புலர் விடியலு மாலை
பகலு மாலை துணையி லோர்க்கே.

என்பது பருவ வரவின்கண் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

மிளைப்பெருங் கந்தன்

உ௲௫. பாலை

ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றில்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே.

என்பது வரையாது பிரிந்துவருவான் வாடைக்கு உரைப்பானாய்ப் பாகற்கு உரைத்தது. மாயேண்டன

உ௱௬. நெய்தல்

விட்டென விடுக்குநாள் வருக வதுநீ
நொந்தனை யாயிற் றந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமண லடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேக்கும்
தண்கடற் சேர்ப்பநீ யுண்டவென் னலக்கே.

என்பது வரைவிடை வைத்துப் பிரிவான் இவள் வேறுபடாமை ஆற்றுவி என்றற்குத் தோழி நகையாடி உரைத்தது.

நரிவெரூஉத் தலையார்

உ௱௭. பாலை

அஞ்சுவ தறியா தமர்துணை தழீஇ
நெஞ்சுணப் பிரிந்தன் றாயினு மெஞ்சிய
கைபிணி நெகிழினஃ தெவனோ நன்றுஞ்
சேய வம்ம விருவா மிடையே
மாக்கடற் றிரையின் முழங்கி வலனேர்பு
கோட்புலி வழங்குஞ் சோலை
எனைத்தென் றெண்ணுகோ முயக்கிடை மலைவே.

என்பது பொருண்முற்றி மீள்வான் தேர்ப்பாகற்கு உரைப்பானாய்த் தன் நெஞ்சிற்கு உரைத்தது. அள்ளூர் நன்முல்லை

உ௱௮. மருதம்

பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்
தொண்டி யன்ன வென்னலந் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே.

என்பது தலைமகன் பரத்தையின் மறுத்தந்து வாயில் வேண்டித் தோழியிடைச் சென்று தெளிப்பான் புக்காற்குத் தோழி சொல்லி யது. குன்றியன்

உருகூ. குறிஞ்சி

தொடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே
விடுநா ணுண்டோ தோழி விடர்முகைச்
சிலம்புடன் கமழு மலங்குகுலைக் காந்தள்
நறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியிற் றோன்றும்
முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே.

என்பது சிறைப்புறம் ஆசிரியன் பெருங்கண்ணன்

உச0. முல்லை

பனிப்புத லிவர்ந்த பைங்கொடி யவரைக்
கிளிவா யொப்பி னொளிவிடு பன்மலர்
வெருக்குப்பல் லுருவின் முல்லையொடு கஞலி
வாடை வந்ததன் றலையு நோய்பொரக்
கண்டிசின் வாழி தோழி தெண்டிரைக்
கடலாழ் கலத்திற் றோற்றி
மாலை மறையுமவர் மணிநெடுங் குன்றே.

என்பது வரைவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. கொல்லனழிசி

உசக. குறிஞ்சி

யாமெங் காமந் தாங்கவுந் தாந்தங்
கெழுதகை மையி னழுதன தோழி
கன்றாற்றுப் படுத்த புன்றலைச் சிறூஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி

ஏறு திட்ட வேமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பும்
குன்ற நாடற் கண்டவென் கண்ணே

என்பது பிரிவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. கபிலர்

உசஉ. முல்லை

கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேர்ந்துவர[1] லறியாது செம்ம லேரே.

என்பது கற்புக்காலத்துக் கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது. குழற்றத்தன்

உசரு. நெய்தல்

மானடி யன்ன கவட்டிலை யடும்பின்
தார்மணி யன்ன வொண்பூக் கொழுதி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்
புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
உள்ளேன் றோழி படீஇயரென் கண்ணே.

என்பது வன்புறை எதிரழிந்து சொல்லியது. நம்பிகுட்டுவன்

உசச. குறிஞ்சி

பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவுக்கதவு முயறல்
கேளே மல்லேங் கேட்டனெம் பெரும

(பி - ம்.) 1. சேந்துவர.

ஓரி முருங்கப் பீலி சாய
நன்மயில் வலைப்பட் டாங்கியாம்
உயங்குதொறு முயங்கு மறனில் யாயே.

என்பது இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைத் தாம் காவன் மிகுதியாற் புறப்பட்டு எதிர்கொள்ளப் பெறாதவழிப் பிற்றை ஞான்று தோழி வரைந்துகொள்ளினல்லது இவ்வொழுகலாற்றின் இனிக் கூடலரிதேனை வரைவுகடாயது. கண்ணன்

உசரு. நெய்தல்

கடலங் கான லாய மாய்ந்தவென்
நலமிழந் ததனினு நனியின் னாதே
வாள்போல் வாய கொழுமடற் றாழை
மாணில் வென்னாட்டு வேலி யாகும்
மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோ ரறியப் பரந்துவெளிப் படினே.

என்பது வரைவிடை ஆற்றள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. மாலைமாறன்

உசசு. நெய்தல்

பெருங்கடற் றிரையது[1] சிறுவெண் காக்கை
களிற்றுச் செவியன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பானாட் டனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப வதற்கொண்
டோரு மலைக்கு மன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
இளையரு மடவரு முளரே
அலையாத் தாயரொடு நற்பா லோரே.

என்பது சிறைப்புறம். கபிலர்

(பி - ம்.) 1. கரையது.

உசஎ. குறிஞ்சி

[1]எழின்மிக வுடைய தீங்கனிப் படூஉந்
திறவோர் செய்வினை யறவ தாகும்
கிளையுடை மாந்தர்க்குப் புனையுமா றில்லென
ஆங்கறிந் திசினே தோழி வேங்கை
வீயா மென்சினை வீயுக யானை
ஆர்துயி லியம்பு நாடன்
மார்புரித் தாகிய மறுவி னட்பே.

என்பது கடிநகர்த் தெளிவு விலங்கினமை அறியத் தோழி கூறியது. வரைவுடன்பட்ட தோழி தலைமகட்குக் கூறியதூஉமாம்.

சேந்தம்பூதனர்

உசஅ. நெய்தல்

அதுவா லன்மையோ வரிதே யவன்மார்
பிறக வென்ற[2] நாளே குறுகி
ஈங்கா கின்றே தோழி கானல்
ஆடரை புதையக் கோடை யிட்ட
அடும்பிவர் மணற்கோ டூர நெடும்பனை
குறிய வாகுந் துறைவனைப்
பெரிய கூறி யாயறிந் தனளே.

என்பது வரைவு நீட்டித்தவழி ஆற்றளாகிய கிழத்தியைத் தோழி ஆற்றுவித்தது.

உலோச்சனர்

உசகூ. குறிஞ்சி

இனமயி லகவு மரம்பயில் கானத்து
நரைமுக வூகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சாரலவர் நாட்டுக்

(பி - ம்.) 1. எழினி. 2. வேன்ற.

குன்ற நோக்கினென் றோழி
பண்டை யற்றோ கண்டிசி னுதலே.

என்பது வரைவிடை வைப்ப ஆற்றகிற்றியோ என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கபிலர்

உருo. பாலை

பரலவற் படுநீர் மாந்தித் துணையோ
டிரலை நன்மா னெறிதலு முகளும்
மாலை வாரா வளவைக் காலியற்
கடுமா கடவுமதி பாக நெடுநீர்ப்
பொருகயன் முரணிய வுண்கண்
தெரிதீங் கிளவி தெருமர லுயவே.[1]

என்பது தலைமகன் பாகற்கு உரைத்தது.

நாமலார் மகன் இளங்கண்ணன்

உருக. முல்லை

மடவ வாழி மஞ்ஞை மாயினங்[2]
கால மாரி பெய்தென வதனெதிர்
ஆலு[3] மாலின பிடவும் பூத்தன
காரன் றிகுளை தீர்கநின் படரே
கழிந்த மாரிக் கொழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய வுகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.

என்பது பிரிவிடைத் தோழி பருவமன்று, பட்டது வம்பு என்று வற்புறுத்தியது.

இடைக்காடர்

உருஉ. குறிஞ்சி

நெடிய திரண்ட தோள்வளை நெகிழக்
கொடிய னாகிய குன்றுகெழு நாடன்

(பி - ம்.) 1. தெருமர லகவே. 2. யாயினம். 3. ஆலலு.

வருவதோர் காலையின் முகந்திரி யாது
கடவுட் கற்பி னவனே பேணி
மடவை மன்ற நீயெனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ காணுங் காலே.

என்பது தலைமகன் வரவறிந்த தோழி அவர் நம்மை வலிந்து போயினார்க்கு எம்பெருமாட்டி தீமைகடிந்து நன்காற்றினாய் என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

கிடங்கிற் குலபதி நக்கண்ணன்

௨௫௩. பாலை

கேளா ராகுவர் தோழி கேட்பின்
விழுமிது கழிவ தாயினு நெகிழ்நூற்
பூச்சே ரணையிற் பெருங்கவின் றொலைந்தநின்
ஆடுதுயர் கொட்பி னீடலர் மாதோ
ஒலிகழை நிவந்த வோங்குமலைச் சாரற்
புலிபுகா வுறுத்த புலவுநா றுகல்லளை
ஆறுசென் மாக்கள் சேக்குங்
கோடுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது. **பூங்கண்ணன்**

௨௫௪. பாலை

இலையி லஞ்சினை யினவண் டார்ப்ப
முலையேர் மென்முகை யவிழ்ந்த கோங்கின்
தலையலர் வந்தன வாரா தோழி
துயிலின் கங்குற் றுயில்வு மறந்தனர்
பயிலிருங் கதுப்பிற் பாயலு முள்ளார்

செய்பொரு டரகைஇச் சென்றோர்
எய்தின ராலென வரூஉந் தாதே.

என்பது பருவங்கண்டு வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

பார்காப்பான்

உருரு. பாலை

பொத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்குநடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்கும்
தடமருப் பியானை கண்டனர் தோழி
தம் கட்கட னிறீஇய ரெண்ணி யிடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங்[1] காதலர் சென்ற வாறே.

என்பது இடைநின்று மீள்வரெனக் கவன்ற கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

கடுகுபெருந்தேவன்

உருசு. பாலை

மூணிவார்ந் தன்ன மாக்கொடி யறுகைப்
பிணங்கரின் மென்கொம்பு பிணையொடு மமர்ந்த மாறாது
மானே றுகளுங் கானம் பிற்பட
இருநலம் படீஇ வருது மவ்வரைத்
தாங்க லொல்லுமோ பூங்குழை யோயெனச்
சொல்லா முன்னர் நில்லா வாகி
நீர்விலங் கழுந்த லாறு
தேர்விலங் கினவாற் றெரிவை கண்ணே.

என்பது பொருள் விலக்கப்பட்ட கிழவன் செலவழுங்கியது.

(பி - ம்.) 1. நாம.

உருஎ. குறிஞ்சி

வேரு முதலுங் கோடு மொராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும் வரூஉம்
அகலினு மகலா தாகி
இகலுந் தோழிநங் காமத்துப் பகையே.

என்பது வரைவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

உறையூர்ச் சிறுகந்தன்

உருஅ. மருதம்

வாரலெஞ் சேரி தாரனின் றாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்த றுறந்தை
அரிய லிலம்புக விளங்கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலந் தொலைவன கண்டே.

என்பது தோழி தலைமகற்கு வாயின் மறுத்தது.
வாயில் நேர்ந்ததூஉமாம். பரணர்

உருகூ. குறிஞ்சி

மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்
தருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்
முகையவிழ்ந் தானா நாறு நறுநுதற்
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோயே
ஒல்லை யாயினுங் கொல்லை யாயினும்

நீயளந் தறிவைநின் புரைமை வாய்போல்
பொய்ம்மொழி கூறலஃ தெவனோ
நெஞ்ச நன்றே[1] நின்வயி[2] னானே.

என்பது காப்பு மிகுதிக்கண் ஆற்றளாகிய தோழி அறத்தொடுநின்று யானே பரிகரிப்பல் என்று கருதியதனைத் தலைமகளும் நயப்பாளாகக்கூறியது.
கபிலர்

உகூ0. பாலை

குருகு மிருவிசும் பிவரும் புதலும்
வரிவண் டூத வாய்நெகிழ்ந் தனவே
சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்
வருவர்கொல் வாழி தோழி பொருவார்
மண்ணெடுத் துண்ணு மண்ணல் யானை
வண்டேர்த் தொண்டையர் வழையம லடுக்கத்துக்
கன்றி லோரா விலங்கிய
புன்று ளோமைய சுரனிறந் தோரே.

என்பது அவர் வரவிற்கு நிமித்தமாயினகண்டு ஆற்றளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.
கல்லாடனார்

உகூக. குறிஞ்சி

பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின் <u>விற்பெயற்</u>[3] கடைநாட்
சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
நள்ளென் யாமத் தையெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானு மென்கண்
துஞ்சா வாழி தோழி காவலர்

(பி - ம்.) 1. நின்றே. 2. நன்வயி. 3. சிற்பெயல்.

கணைக்காய் வளையின் வருந்தியென்
னெஞ்சுபுண் ணுற்ற விழுமந் தானே.

என்பது இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. கழார்க்கீரனெயிற்றி

உசுஉ. பாலை

ஊஉ ரலரெழச் சேரி கல்லென
ஆனா தலைக்கு மறனி லன்னை
தானே யிருக்கத் தன்மனை யானே
நெல்லி தின்ற முள்ளெயி றுதயங்க
உணலாய்ந் திசினு லவரொடு சேய்நாட்டு
விண்டொட நிவந்த விலங்குமலைக் கவாஅற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே.

என்பது உடன்போக்கு நேர்ந்த தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது. பாலைபாடிய பெருங்கடுங்கோ

உசுரு. குறிஞ்சி

மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேஎய்க் கொளீஇய ளிவளெனப் படுதல்
நோதக் கன்றே தோழி மால்வரை
மழைவிளை யாடு நாடனைப்
பிழையே மாகிய நாமிதற் படவே.

என்பது அன்னை வெறியெடுக்கக் கருதாநின்றள்; இனி யாம் இதற்கு என்கொலோ செயற்பாலது எனத் தோழி தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகக் கூறியது. பெருஞ்சாத்தன்

உசுச. குறிஞ்சி

கலிமழை கெழீஇய கான்யாற் றிகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர வியலி
ஆடுமயி லகவு நாட னம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
பசந்தக் காலும் பசப்பொல் லாதே.

என்பது ஆற்றளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்றது.

கபிலர்

உசுரு. குறிஞ்சி

காந்தளங் கொழுமுகை காவல் செல்லாது
வண்டுவாய் திறக்கும் பொழுதிற் பண்டும்
தாமறி செம்மைச் சான்றோர் கண்ட
கடனறி மாக்கள் போல விடன்விட்
டிதழ்தலை யவிழ்ந்த வேகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன் றோழி நின்னிலை
யான்றனக் குரைத்தன னாகத்
தானா ணினனிஃ தாகா வாறே.

என்பது வரையாது பிரிந்த இடத்து அவர் பிரிந்த காரணம் நின்னை வரைந்துகோடல் காரணமாகத்தான் எனத் தோழி தலைமகட்குக் கூறியது.

கருவூர்க் கதப்பிள்ளை

உசுசு. பாலை

* நமக்கொன் றுரையா ராயினுந் தமக்கொன்
றின்னா விரவி னின்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
* * * * *

---

* இந்தப் பாட்டில் இரண்டு வரிகள் ஒரு பிரதியிலும் காணப் படவில்லை.

* * * * *

துறத்தல் வல்லி யோர் புள்வாய்த் தூதே.

என்பது வரையாது பிரிந்த இடத்துத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது. நக்கீரர்

உசூஎ. பாலை

இருங்கண் ஞாலத் தீண்டுபயப் பெருவளம்
ஒருங்குட னியைவ தாயினுங் கரும்பின்
காலரி கடிகைக் கண்ணயின் றன்ன
வாலெயி றூறிய வசையி றீநீர்க்
கோலமை குறுந்தொடிக் குறுமக ளொழிய
ஆள்வினை மருங்கிற் பிரியார் நாளும்
உறன்முறை மரபிற் கூற்றத்
தறனில் கோணற் கறிந்திசி னோரே.

என்பது மேனின்றும் ஆடவர் பொருட்குப் பிரிந்தாராகலின் நாமும் பொருட்குப் பிரிதும் என்னும் நெஞ்சிற்கு நாளது சின்மையும் இளமையது அருமையும் கூறிச் செலவு அழுங்கியது. காலரிகடிகையார்

உசூஅ. குறிஞ்சி

சேறி ரோவெனச் செப்பலு மாற்றும்
வருவி ரோவென வினவலும் வினவாம்
யாங்குச்செய் வாங்கொ றோழி பாம்பின்
பையுடை யிருந்தலை துமிக்கு மேற்றொடு
நடுகா ளொன்னுர் வந்து
நெடுமென் பணைத்தோ ளடைந்திசி னோரே.

என்பது தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது. கருவூர்ச் சேரமான் சாத்தன்

௨௬௯. நெய்தல்

சேயாறு சென்று துணையிரி யசாவா
துசாவுநர்ப் பெறினே நன்றுமற் றில்லை
வயச்சுறா வெறிந்த புண்டணிந் தெந்தையும்
நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்
உப்பை மாறி வெண்ணெற் றரீஇய
உப்புவிளை கழனி சென்றன ளதனால்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பற்
கினிவரி னெளிய னென்னுந் தூதே.

என்பது தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. **கல்லாடனார்**

௨௭௦. முல்லை

தாழிரு டுமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழியிற்
கடிப்பிகு[1] முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொ
டிவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தா ணாண்மலர் நாறும்
நறுமென் கூந்தன் மெல்லணை யேமே.

என்பது வினைமுற்றிப் புகுந்த தலைமகன் கிழத்தியோடு உடனிருந்து கூறியது. **பாண்டியன் பன்னாடு தந்தான்**

௨௭௧. மருதம்

அருவி யன்ன பருவுறை சிதறி
யாறுநிறை பகரு நாடனைத் தெரியுற்)

(பி - ம்.) 1. *கடிப்பிகு.*

றலைந்து மன்னு மொருநாண் மற்றது
தவப்பன் ஞூடோண் மயங்கி
வெளவும் பண்பி னோயா கின்றே.

என்பது தலைமகற்கு வாயினேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது. அழிசி நச்சாத்தனார்

உஎஉ. குறிஞ்சி

தீண்டலு மியைவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர்[1] கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தகைந்த[2]
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல வாளி
மாறுகொண்[3] டன்ன வுண்கண்
நாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே.

என்பது கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது. ஒருசிறைப் பெரியன்

உஎங. பாலை

அல்குறு பொழுதிற் றிருதுமுகை தயங்கப்
பெருங்காட் டுள்ளூஞ் மசைவளி போலத்
தண்ணிய கமழு மொண்ணுத லோயே
நொந்தனை யாயிற் கண்டது மொழிவல்
பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
பறியா தேறிய மடவோன் போல
வேமாந் தன்றிவ் வுலகம்
நாமுளே மாகப் பிரியலென் தெளிமே.

(பி - ம்) 1. இளையர். 2. தன்னையர். 3. மாறுகண்டன்ன.

என்பது பிரிவர் எனக்கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

சிறைக்குடி யாந்தையார்

௨௭௪. பாலை

புறவுப் புறத்தன்ன புன்கா லுகாஅத்
தூரவுச்சினை யன்ன நளிகனி யுதிரல்
விடுகணை வில்லொடு பற்றிக் கொடியவர்
வருநர்ப் பார்க்கும் வன்க ணாடவர்
நீர்நசை வேட்கையி னார்மென்ப தணியும்
இன்னாக் கானமு மினிய பொன்னொடு
மணிமிடை யல்குன் மடந்தை
அணிமுலை யாக முயங்கினஞ்[1] செலினே.

என்பது பொருள் வலித்த நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

உருத்திரன்

௨௭௫. முல்லை

முல்லை யூர்ந்த கல்லுயர் பேறிக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி
எல்லூர்ச் சேர்தரு மேறுடை யினத்துப்
புல்லார் நல்லான் பூமணி கொல்லோ
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
வல்வில் விளையர் பக்கம் போற்ற
ஈர்மணற் காட்டாறு வரூஉம்
தேர்மணி கொல்லாண் டியம்பிய வுளவே.

என்பது பருவவரவின்கண் வரவு நிமித்தந் தோன்றத் தோழி தலைமகட்கு உரைத்தது.

ஒக்கூர் மாசாத்தியார்

(பி - ம்.) 1. மூழ்கினம்.

உ௭௬. குறிஞ்சி

பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவள்
உருத்தெழு வனமுலை யொளிபெற வெழுதிய
தொய்யில் காப்போ ரறிதலு மறியார்
முறையுடை யரசன் செங்கோல் வையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் வழுங்க லூரே.

என்பது தோழிக்குக் குறைமறுமல் தலைமகன் கூறியது.

கோழிக் கொற்றன்

உ௭௭. பாலை

ஆசி றெருவி ணுசில் வியன்கடை
செந்நெ லமலை வெண்மை வெள்ளிழுது
ஓரிற் பிச்சை யார மாந்தி
அற்சிரை வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்குங் கடைபெயல் வாடை
எக்கால் வருவ தென்றி
அக்கால் வருவரெங் காத லோரே.

என்பது தலைமகன் பிரிந்தவழி அவன் குறித்த பருவ வரவு தோழி அறிவாரைக் கண்டு வினவியது.

ஓரிற்பிச்சையார்

உ௭௮. பாலை

உறுவளி யுளரிய வந்தளிர் மாஅத்து
முறிகண் டன்ன மெல்லென் சீறடிச்
சிறுபசும் பாவையு மெம்மு முள்ளார்

கொடியர் வாழி தோழி கடுவன்
ஊழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்
தேற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே.

என்பது பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

பேரிசாத்தன்.

உ௭௯. முல்லை

திரிமருப் பெருமை யிருணிற மையான்
வருமிட றியாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியம்புதொ றிசைக்கும்
இதுபொழு தாகவும் வாரார் கொல்லோ
மழைகழி விசும்பின் மாறிய மாயிருந் துறுகல்
துகள்சூழ் யானையிற் பொலியத் தோன்றும்
இரும்பல் குன்றம் போகித்
திருந்திறைப் பணைத்தோ ளுள்ளா தோரே.

என்பது வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

மதுரை மருதனிளநாகனார்.

உ௮௦. குறிஞ்சி

கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
நெஞ்சு பிணிக்கொண்ட வஞ்சி லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே.

என்பது கழற்றெதிர்மறை.

நக்கீரர்.

உ௯௧. பாலை

வெண்மணற் பொதுளிய பைங்காற் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமி வெண்டோ
டத்த வேம்பி னமலை வான்பூச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடிக்
குன்றுதலை மணந்த கானம்
சென்றனர் கொல்லோ சேயிழை நமரே.

என்பது பிரிவிடை வேறுபட்டாளைக் கண்டு தோழி வற்புறுப் பாட்டுக் கிழத்தி உரைத்தது.

குடவாயிற் கீரத்தனார்

உ௯௨. பாலை

செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கவ்வை நாற்றின் காரிரு ளோரிலை
நவ்வி நாண்மறி கவ்விக்கடன் கழிக்கும்
காரெதிர் தண்புனங் காணிற் கைவளை
நீர்திகழ் சிலம்பி னோராங் கவிந்த
வெண்கூ தாளத் தந்தூம்பு புதுமலர்
ஆர்கழல் புகுவீ போலச்
சோர்குவ[1] வல்ல வென்பர்கொ லவரே.

என்பது வினைவயிற் பிரிந்தவிடத்துத் தோழிக்கு உரைத்தது.

நாகம்போத்தன்

உ௯௩. பாலை

உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவெனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி யென்றுங்

(பி - ம்.) 1. சேர்குவ.

கூற்றத் தன்ன கொலைவேன் மறவர்
ஆற்றிருந் தல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடைப் பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ ருடைய[1] நீரி லாறே.

என்பது தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழி ஆற்றளெனக் கவன்ற தோழிக்கு அவர் பிரிய ஆற்றேனாயினேன் அல்லேன் அவர் போயின கானத்துத்தன்மை நினைந்து வேறுபட்டேன் என்று கிழத்தி சொல்லியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ

உ௪௪. குறிஞ்சி

பொருத யானைப் புகர்முகங் கடுப்ப
மன்றத் துறுகன் மீமிசைப் பலவுடன்
ஒண்செங் காந்த ளவிழு நாடன்
அறவ னாயினு மல்ல னாயினும்
நம்மே சுவரோ தம்மிலர் கொல்லோ
வரையிற் றாழ்ந்த வாள்வெள் ளருவி
கொன்னிலைக் குரம்பையி னிழிதரும்
இன்னா திருந்தவிச் சிறுகுடி யோரே.

என்பது வரைவிடைத் தோழி கிழத்திக்கு உரைப்பாளாய் உரைத்தது.

மிளைவேள் தித்தன்

உ௪௫. பாலை

வைகா வைகல் வைகவும் வாரார்
எல்லா வெல்லை யெல்லவுந் தோன்றார்
யாண்டோர்[2] கொல்லோ தோழி யீண்டிவர்
சொல்லிய பருவமோ விதுவே பல்லூழ்
புன்புறப் பெடையொடு பயிரி யின்புற

(பி - ம்.) 1. நெடுமூதிடைய. 2. யாண்டுளோர்.

இமைக்கண் ணேதா கின்றே மைத்தலை
ஊனசையொடு பருந்திருந் துயக்கும்)
வானுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

என்பது பருவங்கண்டு வேறுபட்ட இடத்து வற்புறுத்தும் தோழிக்கு வன்புறை எதிரழிந்து தலைமகள் சொல்லியது. பூதத்தேவன்

உஉ௬. குறிஞ்சி

உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த[1] மூறுஞ் செவ்வாய்க் கமழகில்
ஆர நாறு மறல்போற் கூந்தல்
பேரமர் மழைக்கண் மடந்தை[2] கொடிச்சி
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே.

என்பது இரந்து பின்னின்ற கிழவன் துறைமறுமற் கூறியது.
பாங்கற்குச் சொல்லியதூஉமாம். எயிற்றியனார்

உஉ௭. முல்லை

அம்ம வாழி தோழி காதலர்
இன்னே கண்டுந் துறக்குவர் கொல்லோ
முந்நாற் றிங்க[3] ணிறைபொறுத் தசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூன் மகளிர் போல நீர்கொண்டு
விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்
செழும்பல் குன்ற நோக்கிப்
பெருங்கலி வான மேர்தரும் பொழுதே.

என்பது பிரிவிடை வேறுபட்ட கிழத்தி நம்மைத் துறந்து வாரா ரென்று கவன்றாட்குப் பருவங்காட்டித் தோழி வருவர் எனச் சொல்லியது. கச்சிப்பேட்டு நன்னாகையார்

(பி - ம்.) 1. றமுத. 2. கொடிச்சி. 3. முந்நாட்டிங்கள்.

உஅஅ. குறிஞ்சி

கறிவள ரடுக்கத் தாங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்கன் னாடன்
இனிய னாக லினினத் தியன்ற
இன்னா மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ளுலகே.

என்பது தலைமகனது வரவுணர்ந்து நம்பெருமான் நமக்கு அன்பிலன் எனற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. கபிலர்

உஅகூ. முல்லை

வளர்பிறை போல வழிவழி பெருகி
இறைவளை நெகிழ்த்த வெவ்வ நோயொடு
குழைபிசைந் தனையே மாகிச் சாஅய்
உழைய ரன்மையி னுழப்ப தன்றியும்
மழையுந் தோழி மான்று பட்டன்றே
பட்ட மாரி படாஅக் கண்ணும்
அவர்திறத் திரங்கு நம்மினும்
நந்திறத் திரங்குமிவ் வழுங்க லூரே.

என்பது காலங்கண்டு வேறுபட்டாள் எனக் கவன்ற தோழிக்குக் காலத்து வந்திலர் என்று வேறு பட்டேனல்லேன், வரைப்புறத்தார் கொடியர் என்று கூறக்கேட்டு வேறுபட்டேன் என்று தலைமகள் சொல்லியது. பெருங்கண்ணன்

உகூ௦. நெய்தல்

காமந் தாங்குமதி யென்போர் தாமஃது
அறியுநர்[1] கொல்லோ வனைமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயிற்

(பி - ம்.) 1. *அறியலர்.*

செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லா குதுமே.

என்பது வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் அழிவுற்றுச் சொல்லியது. கல்பொரு சிறுநுரையார்

உ௱௧. குறிஞ்சி

சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்
படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
இசைஇயி னிசையா யின்பா ணித்தே
கிளியவள் விளியென விழலொல் லாவே
அதுபுலந் தழுத கண்ணே சாரற்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலைஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றவ்வே.[1]

என்பது பாங்கற்கு உரைத்தது. கபிலர்

உ௱௨. குறிஞ்சி

மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்[2]
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ[3] வன்னை
ஒருநாள்,[4] நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே.

(பி - ம்.) 1. றனவே. 2. றப்பிற். 3. செலீயரோ.
4. இது ஒரு பிரதியிற் காணப்படவில்லை.

என்பது தோழி இரவுக்குறிக்கட் சிறைப்புறமாகக் காப்பு மிகுதி சொல்லியது. பரணர்

௨௯௩. மருதம்

கள்ளிற் கேளி ரார்த்திய வுள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி யருமன் மூதூ ரன்ன
வயல்வெள் ளாம்பல் பகைநெ றித்தழை
தித்திக் குறங்கி னூழ்மா றலைப்ப
வருமே சேயிழை யந்திற்
கொழுநற் காணிய வளியேன் யானே.

என்பது பரத்தையிற் பிரிந்துவந்த கிழவற்கு வாலாயிகப்புக்க தோழிக்குக் கிழத்தி உரைத்தது. கள்ளில் ஆத்திரையன்

௨௯௪. நெய்தல்

கடலுட னாடியுங் கான லல்கியுந்
தொடலை யாயமொடு தழூஉவணி யயர்ந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே யலர்ந்தன்று மன்னே
துத்திப் பாந்தட்[1] பைத்தக லல்குற்
றிருந்திழைத் துயல்வுக்கோட் டசைத்த பசுங்கழைத்
தழைதினு முறையிற் போகான்
தான்றந் தனன்யாய் காத்தோம் பல்லே.

என்பது பகற்குறிக்கண் தலைமகன் வந்தவிடத்துத் தோழி செறிப் பறிவுறீஇயது. அஞ்சியாந்தை

(பி - ம்.) 1. *தித்தி பரந்த.*

உகூரு. மருதம்

உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு நின்றாய்[1] நீயே யிஃதோ
ஓரா வல்சிச் சீரில் வாழ்க்கை
பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே.

என்பது வாயில் வேண்டிச் சென்ற கிழவற்குத் தோழி உரைத்தது.

தூங்கலோரி

உகூசு. நெய்தல்

அம்ம வாழி தோழி புன்னை
அலங்குசினை யிருந்த வஞ்சிறை நாரை
அறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற்
கண்ணுறு நெய்தல் கதிரொடு நயக்குந்
தண்ணந் துறைவற் காணின் முன்னின்று
கடிய கழற லோம்புமதி தொடியோள்
இன்ன ளாகத் துறத்தல்
நும்மிற் றகுமோ வென்றனை துணிந்தே.

என்பது காணும்பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலான் ஆற்றாளாய தலைமகள் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. பெரும்பாக்கன்

உகூஎ. குறிஞ்சி

அவ்விளிம் புரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறற்பகை பேணார்
மாறுநின் றெதிர்ந்த வாறுசெல் வம்பலர்

(பி - ம்.) 1. வருதி.

உவலிடு பதுக்கை யூரிற் றோன்றுங்
கல்லுயர் நனந்தலை நல்ல கூறிப்
புணர்ந்துடன் போதல் பொருளென
உணர்ந்தேன் மன்றவவ ருணரா வூங்கே.

என்பது தோழி வரவு மலிந்தது.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணன்

உ௱௬௯. குறிஞ்சி

சேரி சேர மெல்ல வந்துவந்
தரிது வாய்விட் டினிய கூறி
வைகறோறு நிறம்பெயர்ந் துறையுமவன்
பைதனோக்க நினையாய் தோழி
இன்கடுங் களிற்றி னருதை தந்தை
வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசின் மானப்
பிறிதொன்று குறித்தவ னெடும்புற நிலையே.

என்பது கிழத்திக்குத் தோழி துறைமறுமற் கூறியது. பரணர்

உ௱௭௰. நெய்தல்

இதுமற் றெவனோ தோழி முதுநீர்ப்
புணரி திளைக்கும் புள்ளிமிழ் கானல்
இணர்வீழ் புன்னை யெக்கர் நீழற்
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
கண்டன மன்னெங் கண்ணே யவன்சொற்
கேட்டன மன்னெஞ் செவியே மற்றவன்
மணப்பின் மாணல மெய்தித்
தணப்பின் ஞெகிழ்பவெந் தடமென் றோளே.

என்பது சிறைப்புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

வெண்மணிப்பூதி

௩௦௦. குறிஞ்சி

குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்ப லூறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கி னன்ன
நுண்பஃ றித்தி மாஅ யோயே
நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே
யானே, குறுங்கா லன்னங் குலவுமணற் சேக்குங்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூ ழிலன்யா னின்னுடை நட்பே.

என்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சமும் வன்புறையும் கூறியது. சிறைக்குடி யாந்தையார்

௩௦௧. குறிஞ்சி

முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமட லிழைத்த சிறுகோற் குடம்பைக்
கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை யகவும் பானாட் கங்குல்
மன்றம் போழின் மணியுடை[1] நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயின்மறந் தனவாற் றோழியென் கண்ணே.

என்பது வரைவு இடைவைப்ப ஆற்றகிற்றியோ என்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது. குன்றியன்

௩௦௨. குறிஞ்சி

உரைத்திசிற் றோழியது புரைத்தோ வன்றே
அருந்துய ருழத்தலு மாற்றா மதன்றலைப்

(பி - ம்.) 1. போழு மினமணி.

பெரும்பிறி[1] தாக லதனினு மஞ்சுதும்
அன்றோ வின்னு நன்மலை நாடன்
பிரியா நண்பினர் இருவரு மென்னும்
அலர்தற் கஞ்சினன் கொல்லோ பலருடன்
துஞ்சூர் யாமத் தானுமென்
னெஞ்சத் தல்லது வரவறி யோனே.

என்பது வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

மாங்குடிகிழார்

௩௦௩. நெய்தல்

கழிதேர்ந் தசைஇய கருங்கால் வெண்குருகு
அடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைகரை யொலியிற் றுஞ்சுந் துறைவர்
தொன்னிலை நெகிழ்ந்த வளைய ளீங்குப்
பசந்தனண் மன்னென் றோழி யென்னொடு
மின்னிணர்ப் புன்னையம் புகர்நிழற்
பொன்வரி யலவ னாட்டிய ஞான்றே.

என்பது செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது. அம்மூவனார்

௩௦௪. நெய்தல்

கொல்வினைப் பொலிந்த கூர்வா யெறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீ னெறிய
நெடுங்கரை யிருந்த குறுங்கா லன்னத்து
வெண்டோ டிரியும் வீததை கானற்

(பி - ம்.) 1. பேரும்பிறி.

கைதையந் தண்புனற் சேர்ப்பனொடு
செய்தன மன்றவோர் பகைதரு நட்பே.

என்பது வரைவிட ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.
கணக்காயன் தத்தன்

௩0ரு. மருதம்

கண்டா வந்த காம வொள்ளெரி
என்புற நலியினு மவரொடு பேணிச்
சென்றுநா முயங்கற் கருங்காட் சியமே
வந்தஞர் களைதலை யவராற் றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்திடை களையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோ ரிலையா னுற்ற நோயே.

என்பது காப்பு மிகுதிக்கண் தோழி அறத்தொடு நிற்பாளாகத் தனது ஆற்றமை தோன்றத் தலைமகள் தன்னுள்ளே கூறியது.
குப்பைக் கோழியார்

௩0சு. நெய்தல்

மெல்லிய வினிய மேவரு தகுந
இவைமொழி யாமெனச் சொல்லினு மவைநீ
மறத்தியோ வாழியென் னெஞ்சே பலவுடன்
காமர் மாஅத் தாதமர் பூவின்
வண்டுவீழ் பயருங் கானல்
தண்கடற் சேர்ப்பனைக் கண்ட பின்னே.

என்பது காப்பு மிகுதியான் நெஞ்சு மிக்கது வாய்சோர்ந்து கிழத்தி யுரைத்தது.
அம்மூவன்.

௩௦௭. பாலை

வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத் தையெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே யன்றோ
மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்த நோனாது
நிலையுயர் யாஅத் துலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணாந்
தழுங்க னெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை யழப்பிரிந் தோரே.

என்பது பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லிய தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. கடம்பனூர்ச் சாண்டிலியன்

௩௦௮. குறிஞ்சி

சோலை வாழை சுரிந்துகும் பிணிய
அணங்குடை யிருந்தலை நீவலின் மதனழிந்து
மயங்குதுய ருற்ற மையல் வேழம்
உயங்குயிர் மடப்பிடி யுலைபுறந் தைவர
ஆமிழி சிலம்பி னரிதுகண் படுக்கும்
மாமலை நாடன் கேண்மை
காமந் தருவதோர் கைதாழ்ந் தன்றே.

என்பது வரைவிடைக் கிழத்தியை வன்சொற் சொல்லி வற்புறுத் தியது. பெருந்தோட் குறுஞ்சாத்தன்

௩௦௯. மருதம்

கைவினை மாக்கடஞ் செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாசங் கீழ்ப்ப
நடனை வரம்பின் வாடிய விடினுங்

கொடியரோ நிலம்பெயர்ந் துறைவே மென்னாது
பெயர்த்தும் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்த லனையம்[1] பெரும
நீயெமக், கின்னா வியபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே.

என்பது பரத்தையிற் பிரிந்துவந்த கிழவற்குத் தோழிவாயில் நேர்ந்தது.
உறையூர்ச் சல்லியன் குமாரன்

௩௰. நெய்தல்

புள்ளும் புலம்பின பூவுங் கூம்பின
கானலும் புலம்புநனி[2] யுடைத்தே வானமும்
நம்மே போலு மம்மர்த் தாகி
எல்லை கழியப் புல்லென் றன்றே
இன்னு மூளேனே தோழி யிந்நிலை
தண்ணிய கமழு ஞாழல்
தண்ணந் துறைவற் குரைக்குநர்ப் பெறினே.

என்பது வரைவிடை மெலிந்து கிழத்தி தோழிக்குரைத்தது.
பெருங்கண்ணன்

௩௧. நெய்தல்

அலர்யாங் கொழிவ தோழி பெருங்கடற்
புலவுநா றகன்றுறை வலவன் றாங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான்கண் டனனோ விலனே பாணாள்
ஒங்கல் வெண்மணற் றாழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆய மெல்லா முடன்கண் டன்றே.

(பி - ம்.) 1. அனையை. 2. புலம்புபெரிது.

என்பது அலரஞ்சிய தலைமகள் தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. சேந்தன் கீரன்

ருகஉ. குறிஞ்சி

இரண்டறி களவினங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு னம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே.

என்பது இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்கு வரைவிடை வேட்பக் கூறியது. கபிலர்

ருகரு. நெய்தல்

பெருங்கடற் றிரையது சிறவெண் காக்கை
நீத்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பிற் சேக்குந் துறைவனொ
டியாத்தேம் யாத்தன்று நட்பே
அவிழ்த்தற் கரிதது முடிந்தமைந் தன்றே.

என்பது இரவுக்குறி வந்தொழுகுங் காலத்துத் தலைமகனது வரவு உணர்ந்து பண்பிலரென்று இயற்பழித்த தோழிக்கு அவரோடு பிறந்த நட்பு அழியாத நட்பன்றே என்று சிறைப்புறமாகத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

ருகச. முல்லை

சேயுயர் விசும்பி னீருறு கமஞ்சூல்
தண்குர லெழிலி யொண்சுட ரிமைப்பப்

பெயரு மிருளிய புலம்புகொண் மாலையும்
வாரார் வாழி தோழி வரூஉம்
மின்னுற ழிளமுலை ஞெமுங்க
இன்னா வைப்பிற் சுரனிறந் தோரே.

என்பது பிரிவிடை வேறுபட்ட கிழத்தி வற்புறுத்துந் தோழிக்குப் பருவங்காட்டி அழிந்து கூறியது. பேரிசாத்தன்

ருகரு. குறிஞ்சி

எழுதரு மதியங் கடற்கண் டாஅங்
கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயி றனையனென் றோழி
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத் தோளே.

என்பது வரைவிடை[1] வேறுபடுகின்றாய் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. தும்பிசேரகீரன்

ருகசு. நெய்தல்

ஆய்வளை ஞெகிழவு மயர்வுமெய் நிறுப்பவும்
நோய்மலி வருத்த மன்னை யறியின்
உளனே வாழி தோழி விளியா
துரவுக் கடல்பொரு விரவுமண லடைகரை
ஓரை மகளி ரோராங்குக் காட்ட
வாய்ந்த வலவன் றன்புறு துணைப்பரி
ஓங்குவா லருவி விரிதிரை களையுந்
துறைவன் சொன்னவி[2] பிறவா யினவே.

என்பது வரைவிடை வேறுபடுகின்றாய் என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. தும்பிசேரகீரன்

(பி - ம்.) 1. வரைவிடை ஆற்றுகிற்றியோ. 2. சொல்லோ.

௩௧எ. குறிஞ்சி

புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி யயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்
தோங்குமலைப் பைஞ்சுனை பருகு நாடன்
நம்மைவிட் டமையுமோ மற்றே கைம்மிக
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படருந் தண்பனி நாளே.

என்பது பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

மதுரைக் கண்டர்தத்தன்[1]

௩௧அ. நெய்தல்

எறிதருக் கலித்த விலங்குநீர்ப் பரப்பின்
நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறியயர் களத்தினிற் றோன்றுந் துறைவன்
குறியா னாயினுங் குறிப்பினும் பிறிதொன்
றறியார்க் குரைப்பலோ யானே வேய்கவிப்
பணியெழின்[2] மென்றோ ளணைஇய வந்நாட்
பிழையா வஞ்சினஞ் செய்த
களவனுங் கடவனும் புணைவனுந் தானே.

என்பது கிழவன் கேட்கும் அண்மையானாகத் தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

அம்மூவன்

௩௧௯. முல்லை

மானேறு மடப்பிணை தழீஇ மருள் கூர்ந்து
கான நண்ணிய புதன்மறைந் தொடுங்கவுங்
கையுடை நன்மாப் பிடியொடு பொருந்தி

(பி - ம்.) 1. கண்டரகத்தன். 2. பணையெழின்.

அமையணி மருங்கின் மலையகஞ் சேரவும்
மாலைவந் தன்று மாரி மாமழை
பொன்னேர் மேனி நன்னிறஞ்[1] சிதைத்தோர்
இன்னும் வாரா ராயின்
என்னாந் தோழிநம் மின்னுயிர் நிலையே.

என்பது பருவ வரவின்கண் வேறுபட்ட கிழத்தி வன்புறை யெதிரழிந்து சொற்றது.

தாயங்கண்ணன்

௩௨௦. நெய்தல்

பெருங்கடற் பரதவர் கோண்மீ னுணங்கலின்
அருங்கழி கொண்ட விறலின் வாடலொடு
நிலவுநிற வெண்மணல் புல்லப் பலவுடன்
எக்கர்தொறும் பரிக்குந் துறைவனொ டொருநாள்
நக்கதோர் பழியு மிலமே போதவிழ்
பொன்னிணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கர்ப்
புன்னையஞ் சேரி யிவ்வூர்
கொன்னலர் தூற்றுந்தன் கொடுமை யானே.

என்பது அலரஞ்சி ஆற்றளாகிய தலைமகள் தலைவன் கேட்பாளுகத் தோழிக்குக் கூறியது.

தும்பிசேர்கீரன்[2]

௩௨௧. குறிஞ்சி

மலைச்சேர், அஞ்செஞ் சாந்தி னார மார்பினன்[3]
சுனைப்பூங் குவளைச் சுரும்பார் கண்ணியன்
நடுநாள் வந்து நம்மனைப் பெயரும்
மடமா ரறிவைநின் மார்பம ரின்றனை
மன்ற மரையா விரிய வேறட்டுச்

(பி - ம்.) 1. நன்னலம். 2. தும்பி மோசி கீரன்
3. மலைச்சே ரஞ்சாந்தி னாரமார்பினன்.

செங்க ணிரும்புலி குழூஉமு மதனான்
மறைத்தற் காலையோ வன்றே
திறப்பல் வாழிவேண் டன்னைநங் கதவே.

என்பது தோழி கிழத்திக்கு நொதுமலர் வரையுமிடத்து அறத்தொடு நிற்ப னென்றது.

ஙஉஉ. குறிஞ்சி

அமர்க்க ணாமா னஞ்செவிக் குழவி
கானவ ரெடுப்ப வெரீஇ யினந்தீர்ந்து
கான நண்ணிய சிறுகுடிப் பட்டென
இளைய ரோம்ப மரீஇயவ ணயந்து
மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவி னினியவு முளவோ
செல்வாந் தோழி பொல்லாங்கு நடந்தே.

என்பது தலைமகன் வரைவுணர்ந்து தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது. ஐயூர்முடவன்

ஙஉங. முல்லை

எல்லா மெவனோ பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய வெழாலின்
வானத் தெழுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறு நறுநுதல்
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழு நாளே.

என்பது வினைமுற்றினன் பாகற்கு உரைத்தது. பதடிவைகலார்

௲உ௪. நெய்தல்

கொடுங்கான் முதலைக் கோள்வ லேற்றை
வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை
இனமீ னிருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி யிவடன்
மடனுடை மையி னுயக்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே.

என்பது சேறிப்பறி வுறுக்கப்பட்டு இரா வாரா, வரைவல் என்றற்குத் தோழி அது மறுத்து வரைவுகடாயது. கவைமகன்

௲உ௫. நெய்தல்

சேறுஞ் சேறு மென்றலிற் பண்டைத்தம்
மாயச் செலவர் செத்து மருங்கற்று
மன்னிக் கழிகென் றேனே [1] யன்னோ
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குள மாயிற்றென் னிடைமுலை நிணைந்தே [2].

என்பது பிரிவிடை ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து உரைத்தது. நன்னாகையார்

௲உ௬. நெய்தல்

துணைத்த தோகைப் பணைப்பெருந் தோளினர்
கடலாடு மகளிர் கான லிழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி

(பி - ம்.) 1. றேனோ. 2. நிறைந்தே.

ஒருநாட் டுறைவன் றுறப்பிற்
பன்னாள் வரூஉ மின்னா மைத்தே.

என்பது சிறைப்புறம்.

௩௨௭. குறிஞ்சி

நல்கின் வாழு நல்கூர்ந் தோர்வயின்
நயனில ராகுத னன்றென வுணர்ந்த
குன்ற நாடன் றன்னினு நன்று
நின்னிலை கொடிதாற் றீங்க வுழிநீ[1]
நம்மனை மடமக ளின்ன மென்மைச்
சாய லளிய ளென்னாய்
வாழைதந் தனையாற் சிலம்புபுல் லெனவே.

என்பது கிழவன் கேட்கும் அண்மையனாக அவன் மலையினின்று வரும் யாற்றோடு உரைப்பாளாய் உரைத்தது. அம்மூவனார்

௩௨௮. நெய்தல்

சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசி னிரங்குந் துறைவன்
நல்கிய நாடவச் சிலவே யலரே
வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பரணர்[2]
புலிநோக் குறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூ ரார்ப்பினும் பெரிதே.

என்பது வரைவிடை வேறுபடுங் கிழத்தியை அவர் வரையுநாள் அணித்து எனவும் அலரஞ்சல் எனவுங் கூறியது. பரணர்

(பி - ம்.) 1. உழுத. 2. பாணர்.

௩உ௯. பாலை

கான விருப்பை வேனில் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை யுகுதலி னார்கழல்பு
களிறு வழங்கு சிறுநெறி புதையத் தாஅம்
பிறங்குமலை யருஞ்சுர மிறந்தவர்ப் படர்ந்து
பயிலிரு ணடுநாட் டுயிலரி தாகித்
தெண்ணீர் நிகர்மலர் புரையும்
நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே.

என்பது பிரிவிடை மெலிந்த கிழத்தி வற்புறுத்துந் தோழிக்கு யான் ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது. ஓதலாந்தையார்

௩௩0. மருதம்

நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட
நீரிற் பிரியாப் பரூஉத்திரி[1] கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ
இன்கடுங் கள்ளின் மணமில கமழும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொ ளோழியவர் சென்ற நாட்டே.

என்பது பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது. கழார்க்கீரனெயிற்றியன்

௩௩க. பாலை

நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை
ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணுங்
கடுங்கண் யானைக் கான நீந்தி
இறப்பர்கொல் வாழி தோழி நறுவடிப்

(பி - ம்.) 1. பரூஉக்கிரி.

பைங்கான்[1] மாஅத் தந்தளி ரன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினுஞ் சிறந்த வரும்பொரு டாற்கே.

என்பது செலவுக்குறிப்பு அறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

வாடாப்பிரம்மந்தன்

௩௩௨. குறிஞ்சி

வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்
நோய்நீந் தரும்படர் தீரநீ நயந்து
கூறி னெவனோ தோழி நாறுயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றச் சிறுகுடி யிழிதரும்
மன்ற நண்ணிய மலைகிழ வோற்கே.

என்பது வரையாது வந்தொழுகாநின்ற காலத்துக் கிழவன் கேட்பக் கிழத்திக்குத் தோழி கூறியது.

மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்

௩௩௩. குறிஞ்சி

குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனமுண்டு படிந்த பைங்கண் யானை
நறுந்தழை மகளி ரோப்புங் கிள்ளையொடு
குறும்பொறைக் கணவுங் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியி லெவனோ தோழிநம் மறையே.

என்பது அறத்தொடு நிற்பல் எனக் கிழத்திக்குத் தோழி உரைத்தது.

உழுந்தினைம்புலவன்[2]

(பி - ம்.) 1. பைங்கண். 2. உழுந்தினம்புல்லன்.

ருருச. நெய்தல்

சிறுவெண் காக்கைச் செவ்வாய்ப் பைந்தோ
டெறிதிரைத் திவலை யீர்ம்புற நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானல்
இருநீர்ச்[1] சேர்ப்ப னீப்பி னொருநம்
இன்னுயி ரல்லது பிறிதொன்
றெவனோ தோழி நாமிழப் பதுவே.

என்பது வரைவிடை ஆற்றகிற்றியோ என்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

இளம்பூதனார்

ருருரு. குறிஞ்சி

நிரைவளை முன்கை நேரிழை மகளிர்
இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
வெற்ப னண்ணி யதுவே வார்கோல்
வல்விற் கானவர் தங்கை
பெருந்தோட் கொடிச்சி யிருந்த வூரே.

என்பது இரவுக்குறி நயவாமைத் தோழி செறிப் பறிவுறீஇயது.

இருந்தையூர்க் கொற்றன் புலவன்

ருருசு. குறிஞ்சி

செறுவார்க் குவகை யாகத் தெறுவர
வீங்கினம் வருபவோ தேம்பாய் துறைவ
சிறுநா வொண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய

(பி - ம்.) 1. பெருநீர்.

இருங்கழி நெய்தல் போல
வருந்தினை ளளியணீ பிரிந்திசி னோரே.

என்பது தலைமகன் இரவுக்குறி நயந்தானைத் தோழி சொல்லி மறுத்தது.

குன்றியன்

௩௩௭. குறிஞ்சி

முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே[1]
கிளை இய குரலே கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை[2] வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே யணங்குதற்
கியான்றன் னறிவலே[3] தானறி யலளே
யாங்கா குவள்கொ றானே
பெருமுது செல்வ[4] ரொருமட மகளே.

என்பது தோழியை இரந்து பின்னின்ற கிழவன் தனது துறையறி யக் கூறியது.

போதுக்கயத்துக் கீரந்தை

௩௩௮. பாலை

திரிமருப் பிரலை யண்ண னல்லே
றரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ
வீததை வியலரிற் றுஞ்சிப் பொழுதுசெலச்
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலைப்
பின்பனிக் கடைநாட் டண்பனி யச்சிரம்
வந்தன்று பெருவிற றேரே பணைத்தோள்
விளங்குநக ரடங்கிய கற்பின்
நலங்கே ழரிவை புலம்பசா விடவே.

என்பது பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

பெருங்குன்றூர் கிழார்

(பி - ம்.) 1. தலைஇய கிளையே மென்குரல். 2. நிறை. 3. என்னறியலளே; அறிவாலன் னறியலளே. 4. செல்வன்.

௩௩௯. குறிஞ்சி

நறையகில் வயங்கிய நளிபுன னறும்புகை
உறையுறு மகளிர் மையிற் போகிச் சாரற்
குறவர் பாக்கத் திழிதரு நாடன்
மயங்குமலர்க் கோதை நன்மார்பு முயங்கல்
இனிதுமன் வாழி தோழி நறுவிதழ்க்
குவளை யுண்கண் கலுழப்
பசலை யாகா வூங்கலங் கடையே.

என்பது வரைவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி கடுஞ்சொற் சொல்லி வற்புறீஇயது. பேயார்

௩௪௦. நெய்தல்

காமங் கடையிற் காதலர்ப் படர்ந்து
நாமவர்ப் புலம்பி னம்மோ டாகி
ஒருபாற் படுதல் செல்லா தாயிடை
அழுவி[1] னின்ற வலர்வேர்க் கண்டல்
கழிபெயர் மருங்கி னொல்கி யோதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு
வருந்துந் தோழியவர் வருந்தவென் னெஞ்சே.

என்பது இரவுக்குறி உணர்த்திய தோழிக்குக் கிழத்தி மறுத்தது. அம்மூவனார்

௩௪௧. நெய்தல்

பல்வி படீஇய பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடு பொழிலணி கொளாஅச்
சினையினி தாகிய காலையுங் காதலர்
பேணா ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்

(பி - ம்.) அழிவின்.

கண்ணிய வாண்மை கடவ தன்றெனா
வலிய நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் றோழியென் வன்க ணானே.

என்பது பருவ வரவின்கண் வேறுபடும் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. மிளைகிழான் நல்வேட்டன்

௩௪௨. குறிஞ்சி

கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழங்
காவன் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டுங்
குன்ற நாட தகுமோ பைஞ்சுனைக்
குவளைத் தண்டழை யிவளீண்டு வருந்த
நயந்தோர் புன்கண் டீர்க்கும்
பயந்தலைப் படாஅப் பண்பினை யெனினே.

என்பது செறிப் பறிவுறுக்கப்பட்டான் வரைவின்கட் செல்லாது பின்னும் வரவு வேண்டின தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவு கடாயது. காவிரிப்பூம் பட்டினத்துக் கந்தரத்தனர்

௩௪௩. பாலை

நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை யணிமுகம் பாய்ந்தென
மிகுவலி யிரும்புலிப் பகுவா யேற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇய விடர்முகைக்
கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயரு மாறே.

என்பது தோழி கிழத்தியை உடன்போக்கு நயப்பக் கூறியது.
ஈழத்துப் பூதன் றேவன்

௩௱௪௰௪. முல்லை

நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றுந் துவலைப் பனிக்கடுந் திங்கட்
புலம்பயி ரருந்த வண்ண லேற்றொடு
நிலந்தூங் கணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார் குழவி யாளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே.

என்பது பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் கூறியது.

குறுங்குடி மருதன்

௩௱௪௰௫. நெய்தல்

இழையணிந் தியல்வருங் கொடிஞ்சி நெடுந்தேர்
வரைமரு ணெடுமணற் றவிர்த்த னிரவைஇத்
தங்கினி ராயிற் றவறோ தகைய
தழைதா ழல்கு லிவள்புலம் பகலத்
தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழுமென வொலிக்கு மாங்கட்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே.

என்பது பகல் வந்து ஒழுகுவானைத் தோழி இரா வா என்றது.

அண்டர்மகன் குறுவழுதி

௩௱௪௰௬. குறிஞ்சி

நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்ற நண்ணிக் குறவ ரார்ப்ப
மன்றம் போழு நாடன் றோழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்துந்

தினைப்புன மருங்கிற் படுகிளி யோப்பியுங்
காலை வந்து மாலைப் பொழுதின்
நல்லக நயந்துதா மயங்கிச்[1]
சொல்லவு மாகா தஃகி யோனே.

என்பது தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியது.

வாயி லிளங்கண்ணன்

௩௪௭. பாலை

மல்குசுனைப் புலர்ந்த நல்கூர் சுரமுதற்
குமரி வாகைக் கோலுடை[2] நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் றோன்றுங்
கான நீளிடைத் தானு நம்மொ
டொன்றுமணஞ் செய்தன ளிவளெனின்
நன்றே நெஞ்ச நயந்தநின் றுணிவே.

என்பது பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லிச் செலவழுங்கியது.

காவிரிப்பூம் பட்டினத்துச் சேந்தன் கண்ணன்.

௩௪௮. பாலை

தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பிற் றாஅய்
இதழழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூணக வனமுலை நனைத்தலுங்
காணார் கொல்லோ மாணிழை நமரே.

என்பது செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட கிழத்தியைத் தோழி வற்புறீஇயது

மாவளத்தன்

(பி - ம்.) 1. தானுயங்கி. 2. கொல்லுடை.

௩௪௯. நெய்தல்

அடும்பவி[1] ழணிமலர் சிதையமீ னருந்துந்
தடந்தா ணாரை யிருக்கு மெக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலங்
கொள்வா மென்றி தோழி கொள்வாம்
இடுக்க ணஞ்சி யிரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவெனச் சொல்லினும்
இன்னா தோநம் மின்னுயி ரிழந்தே.

என்பது பரத்தை மாட்டுப் பிரிந்துவந்த தலைமகன் கேட்கும் அண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி கூறியது. சாத்தன்

௩௫௦. பாலை

அம்ம வாழி தோழி முன்னின்று
பனிக்கடுங் குன்றஞ் செல்லா தீமெனச்
சொல்லின மாயிற் செல்லார் கொல்லோ
ஆற்றய லிருந்த விருங்கோட்[2] டஞ்சிறை
நெடுங்காற் கணந்து ளாளறி வுறீஇ
யாறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கான நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே.

என்பது பிரிவு நேர்ந்த தலைமகள் அவனது நீக்கத்துக்கண் வேறுபட்டாளைத் தோழி வற்புறீஇயது. ஆலத்தூர் கிழார்

௩௫௧. நெய்தல்

வளையோய் வந்திசின் விரவுங் கொடுந்தாள்
அளைவா ழலவன் கூருகிர் வரித்த
ஈர்மண லீர்ஞெறி சிதைய விழுமென
உருமிசைப் புணரி யுடைதருந் துறைவற்

(பி - ம்.) 1. அரும்பு. 2. இருங்கோட்டஞ்சிறை.

குரிய[1] செப்பினர் நமரே விரியலர்ப்
புன்னை யோங்கிய புலாலஞ் சேரி
இன்னகை யாயத் தாரோ
டின்னுமற் றோவிவ் வழுங்க லூரே.

என்பது தலைமகன் தமர் வரைவொடு வந்தவழி நமர் அவர்க்கு வரைவு நேரார்கொல்லோ என்று அஞ்சிய தலைமகட்குத் தோழி வரைவு மலிந்தது.

அம்மூவனார்

௩௫௨. பாலை

நெடுநீ ராம்ப லடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை
அகலிலைப் பலவின் சாரன் முன்னிப்
பகலுறை முதுமரம் புலம்பப் போகுஞ்
சிறுபுன் மாலை யுண்மை
அறிவேன் றோழியவர்க் காணு மூங்கே.

என்பது பிரிவிடைத் தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியது.

கடியலூர் உருத்திரங்கண்ணன்

௩௫௩. பாலை

ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே
பாடின் னருவி யாடுத லினிதே
நிரையிதழ் பொருந்தாக் கண்ணோ டிரவிற்
பஞ்சி வெண்டிரிச் செஞ்சுடர் நல்லிற்
பின்னுவீழ் சிறுபுறந் தழீஇ
அன்னை முயங்கத் துயிலின் னாதே.

என்பது பகற்குறி வந்து ஒழுகுந் தலைமகன் வெளிப்பாடஞ்சி இரவுக்குறி நயந்தானது குறிப்பறிந்த தோழி இரவின்கண் அன்னையது

(பி - ம்.) 1. குரிமை.

காவலறிந்து பின்னும் பகற்குறியே நன்று அவ்விரவுக்குறியின் என்று பகற்குறியும் இரவுக்குறியும் மறுத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாக வரைவு கடாயது. உறையூர் முதுகூத்தன்

நஉசு. மருதம்

நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்குந்
தணந்தனை யாயினெம் மில்லுய்த்துக் கொடுமோ
அந்தண் பொய்கை யெந்தை யெம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவின்
நடுங்களு ரெவ்வங் களைந்த வெம்மே.

என்பது பரத்தையிற் பிரிந்து வாயில்வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயின் மறுத்தது. கயத்தூர்கிழான்

நஉரு. குறிஞ்சி

பெயல்கண்[1] மறைத்தலின் விசும்புகா ணலரே[2]
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலரே[2]
எல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே.

என்பது இரவுக்குறி நேர்ந்த தலைமகற்குத் தோழிநொந்துகூறியது. கபிலர்

நஉசா. பாலை

நிழலான் றவிந்த[3] நீரி லாரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த

(பி - ம்.) 1. பெயல்கான். 2. காணலையே. 3. நிழலான்றவிர்த.

எவ்வங் கலுழி[1] தவ்வெ னக்குடித்
தியாங்குவல் லுநள்கொ றானே யேந்திய
செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த
பாலும் பலவென வுண்ணாள்
கோலமை குறுந்தொடித் தளிரன் னோளே.

என்பது மகட்போக்கிய செவிலித்தாய் உரைத்தது. கயமனார்

கூ௫௫. குறிஞ்சி

முனிபட ருழந்த பாடி லுண்கட்
பனிகால் போழ்ந்து பணையெழின் ஞெகிழ்தோள்
மெல்லிய வாகலின் மேவரத் திரண்டு
நல்ல வென்னுஞ் சொல்லை மன்னிய
ஏனலஞ் சிறுதினை காக்குஞ் சேஎய்ோன்
ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்
வான்றோய் வெற்பன் மணவா லூங்கே.

என்பது தோழி கிழவன் கேட்பத் அண்மையனாகக் கிழத்திக்குச் சொல்லியது. கபிலர்

கூ௫௪. முல்லை

வீங்கிழை நெகிழ விம்ம வீங்கே
எறிகட் பேதுறல் யாங்கோ டிட்டு
வாய பற்றுநின் படர்சே ணீங்க
வருவே மென்ற பருவ முதுக்காண்
தனியோ ரிரங்கும் பனிகூர் மாலைப்
பல்லான் கோவலர்க் கண்ணிச்
சொல்லு வன்ன முல்லைவெண் முகையே.

(பி - ம்.) 1. காலுழி.

என்பது தலைமகள் பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. கோற்றன்

௧௫௯. மருதம்

கண்டிசிற் பாண பண்புடைத் தம்ம
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்காற் கட்டி னறும்பூஞ் சேக்கைப்
பள்ளி யானையி னுயிரா வசைஇப்
புதல்வற் றழீஇ இயினன் விறலவன்
புதல்வன் றாயவன் புறங்கவை[1] யினளே.

என்பது பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் வாயில் வேண்டிப் பெறாது தானே புக்குக் கூடியது கண்டு தோழி பாணற்குச் சொல்லியது. பேயன்[2]

௧௬௦. குறிஞ்சி

வெறியென வுணர்ந்த வேல னோய்மருந்
தறியா னாகுத லன்னை காணிய
அரும்பட ரெவ்வ மின்றுநா முழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்
பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்
உண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற் சிலம்புஞ் சோலை
இலங்குமலை நாட னிரவி னானே.

என்பது தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. மதுரை ஈழத்துப்பூதன்றேவன்

௧௬௧. குறிஞ்சி

அம்ம வாழி தோழி யன்னைக்
குயர்நிலை யுலகமுஞ் சிறிதா லவர்மலை

(பி - ம்) [1] கவைஇ. [2] பேயனார்.

மாலைப் பெய்த மணங்கம ழுந்தியொடு
காலை வந்த முழுமுதற் காந்தண்
மெல்விரல் குறைய முயங்கலும்
இல்லுய்த்து விடுதலுங் கடியா தோட்கே.

என்பது வரைவு மலிந்தவழித் தோழி நன்காற்றினாய் என்றாட்குக் கிழத்தி சொல்லியது.

கபிலர்

௩௬௨. குறிஞ்சி

முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவ லோம்புமதி வினவுவ[1] துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்பன்
தண்டா ரகலமு முண்ணுமோ பலியே.

என்பது வெறிவிலக்கித் தோழி அறத்தொடு நின்றது.

வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்

௩௬௩. பாலை

கண்ணி மருப்பி னண்ண னல்லேறு
செங்கோற் பதவின்[2] வார்குரல் கறிக்கும்
மடக்கண் வரையா நோக்கிவெய் துற்றுப்
புல்லரை யுகாஅய வருநிழல் வதியும்
இன்னா வருஞ்சுர மிறத்தல்
இனிதோ பெரும வின்றுணைப் பிரிந்தே.

என்பது பிரிவுணர்த்தப்பட்ட தோழி கிழவற்குச் சொல்லியது.

செல்லூர்க் கொற்றன்

(பி - ம்) 1. வினவுதலுடையேன். 2. புதவின; புல்லின்.

௧௬௪. மருதம்

அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூரன்
பொற்கோ லவிர்தொடி தற்கெழு தகுவி
எற்புறங் கூறு மென்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன வவ்வரைக்
கண்பொர மற்றதன் களவா
மண்கொளற் கிவரு மன்னர் போரே.

என்பது வேறோர் பரத்தை புறங்கூறினாள் எனக் கேட்ட இற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது. ஔவையார்

௧௬௫. குறிஞ்சி

கோடீ ரிலங்குவளை நெகிழ நாளும்
பாடில கழிந்து[1] பனியா னாவே
துன்னரு நெடுவரைத் ததும்பி யருவி
தண்ணென் முரசி னிமிழிசை காட்டும்
மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்கட[2] னாடனீ நயந்தோள் கண்ணே.

என்பது யான்வரையுந் துணையும் ஆற்றவல்லளோ என வினவிய கிழவற்குத் தோழி சொல்லியது. மதுரை நல்வெள்ளி

௧௬௬. குறிஞ்சி

பால்வரைத் தமைத்த லல்ல தவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ
வெறியாள் கூறவு மமையா ளதன்றலைப்
பைங்கண் மாச்சுணைப் பல்பிணி யவிழ்ந்த
வள்ளிதழ் நீல நோக்கி யுள்ளகைப்

(பி - ம்) 1. கழிந்துகண். 2. பெருங்கல் நாடனின்.

பொழுகு கண்ண ளாகிப்
பழுதன் றம்மவிவ் வாயிழை துணிவே.

என்பது காவன் மிகுதிக்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு இவ் வேறுபாடு எற்றினன் ஆயது என்ற செவிலிக்குத் தோழி கூறியது.

பேரிசாத்தன்

௩௬௭. மருதம்

கொடியோர் நல்கா ராயினும் யாழநின்
தொடிவிளங் கிறைய தோள்கவின் பெறீஇயர்
உவக்காண் டோழி யவர்வந் திசினே
தொய்யன் மாமழை தொடங்கலி னவர்நாட்டுப்
பூசலாய புகன்றிழி யருவி
மண்ணுறு மணியிற் றோன்றுந்
தண்ணறுந் துறுக லோங்கிய மலையே.

என்பது வரைவுணர்த்திய தோழி தலைமகட்குக் கழியுவகை மீதுராமை யுணர்த்தியது.

வரைவு நீட்டித்த விடத்து ஆற்றளாகிய தலைமகளைத் தோழி ஆற்றும் வகையான் ஆற்றுவித்ததூஉமாம்.

மதுரைமருதனிளநாகன்

௩௬௮. மருதம்

மெல்லிய லோயே மெல்லிய லோயே
நன்னா ணீத்த பழிதீர் மாமை
வனப்பி னாற்றாத லல்லது செப்பிற்
சொல்ல கிற்றா மெல்லிய லோயே
சிறியரும் பெரியரும் வாழு மூர்க்கே
நாளிடைப் படாஅ நளிநீர் நீத்தத்
திண்கரைப் பெருமரம் போலத்
தீதி னிலைமை முயங்குகம் பலவே.

என்பது வரைவு மலிந்த தோழிக்குக் கிழத்தி கூறியது. நக்கீரர்

ருசுகூ. பாலை

அத்த வாகை யமலைவா ணெற்றி
அரியார் சிலம்பி னருவி யார்ப்பக்
கோடை தூங்குங் கானஞ்
செல்வாந் தோழி நல்கினர் நமரே.

என்பது தோழி கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது.

குடவாயிற் கீரத்தனார்

ருஎ0. முல்லை

பொய்கை யாம்ப லணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்குந் தண்டுறை யூரனொ
டிருப்பி னிருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தி
அவர்நல் லகஞ்சே ரொரு[1] மருங் கினமே.

என்பது கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் என்பது கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

வில்லகவிரலினார்

ருஎக. குறிஞ்சி

கைவளை நெகிழ்தலு மெய்ப்பசப் பூர்தலும்
மைபடு சிலம்பி னைவனம் வித்தி
அருவியின் விளைக்கு நாடனொடு
மருவேன் றோழியது காமமோ பெரிதே.

என்பது வரைவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உறையூர் முதுகூத்தன்[2]

ருஎஉ. குறிஞ்சி

பனைத்தலைக்,
கருக்குடை நெடுமடல் குருத்தொடு மாயக்

(பி - ம்) 1. சேனொரு. 2. *முதுகூற்றன்.*

கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்
கணங்கொள் சிமைய வுணங்குங் கானல்
ஆழிதலை வீசிய வயிர்ச்சேற் றருவிக்
கூழை பெயர்க்காக் குழீஇய பதுக்கை
புலர்பதங் கொள்ளா விரவை
அலரெழுந் தன்றிவ் வழுங்க லூரே.

என்பது இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் கேட்பத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

விற்றூற்று மூதெயினன்

கஎங. குறிஞ்சி

நிலம்புடை பெயரினு நீர்திரிந்து பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை யஞ்சிக்
கேடெவ னுடைத்தோ தோழி நீடுமயிர்க்
கடும்ப லூகக் கறைவிர லேற்றை
புடைத்தொடு புடையூ நாறு பலவுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனொ டமைந்தநந் தொடர்பே.

என்பது அலர் மிக்கவழி ஆற்றளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

மதுரைக் கொல்லன் புல்லன்

கஎச. குறிஞ்சி

எந்தையும் யாயு முணரக் காட்டி
ஒளித்த செய்தியின் வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் றலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கையி னொன்றா கின்றே[1]
முடங்க லிறைய தூங்கணங் குரீஇ

(பி - ம்) 1. ஒன்றாயின்றே.

நீடிரும் பெண்ணைத் தொடுத்த
கூடினு மயங்கிய மைய லூரே.

என்பது அறத்தொடு நின்றமை தோழி கிழந்திக்கு உரைத்தது.

உறையூர்ப் பராயனார்[1]

௩௭௫. குறிஞ்சி

அம்ம வாழி தோழி யின்றவர்
வாரா ராயினோ நன்றே சாரற்
சிறுதினை விளைந்த வியன்கண் ணிரும்புனத்
திரவரி வாரிற் றொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்துங் கறங்கும்
யாமங் காவல ரவியன்மா ரன்றே.

என்பது இரவுக்குறிக்கட் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் இருபொழுதும் மறுத்து வரைவு கடாயது.

௩௭௬. நெய்தல்

மன்னுயி ரறியாத் துன்னரும் பொதியிற்
சூருடை யடுக்கத் தாஅங் கடுப்ப
வேனி லானே தண்ணியள் பனியே
வாங்குகதிர் தொகுப்பக்[2] கூம்பி யையென
அலங்குவெயிற் பொதிந்த[3] தாமரை
உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே.

என்பது பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

படுமாற்றூர் மோசிகீரன் கொற்றன்

௩௭௭. குறிஞ்சி

மலரே ருண்கண் மாணலந் தொலைய
வளையேர் மென்றோண் ஞெகிழ்ந்ததன் றலையும்
ஆற்றா கின்றே தோழியாற் றலையே

(பி - ம்) 1. பல்காயனார். 2. தொடுப்ப. 3. பொலிந்த.

அதறிதற் கமையா நாடனொடு
செய்து கொண்டதோர் சிறுநன் னட்பே[1].

என்பது வரைவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து கூறியது.

மோசிகொற்றன்

௩௭௪. பாலை

ஞாயிறு காயாது மரநிழற் படினிய[2]
மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த்
தண்மழை தலையல ரரைக்குகந்த தீத்துச்[3]
சுடர்வாய்[4] நெடுவேற் காளையொடு
மடவர லறிவை[5] போகிய சுரனே.

என்பது மகட் போக்கிய செவிலி தெய்வந்திற்றுப் பராயது.

கயமனார்

௩௭௮. குறிஞ்சி

இன்றியாண் டையனோ தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கின்
ஏன ரகன்மதுத் துளிபெறாஉ[6] நாடன்
அறிவுகாழ்க் கொள்ளு மளவைச் செறிதொடி
எம்பின் வருகுவை நீயெனப்
பொம்ம லோதி நீவி யோனே.

என்பது நொதுமலர் வரைவுழித் தோழி அறத்தொடு நின்றது.

௩௮௦. பாலை

விசும்புகண் புதையப் பாஅய் வேந்தர்
வென்றெறி முரசி னன்பல முழங்கிப்
பெயலா னாதே வானங் காதலர்

(பி - ம்.) 1. நடையே. 2. காணாது மாநிழற் படீஇய. 3. தலையின்றாகத் தண்ணளிச். 4. சுடர்படு. 5. மடமாவரிவை. 6. ஏன ரகன்மை துணிபெறாஉ,

நனிசேய் நாட்டர் நம்முன் னலமே
யாங்குச்செய் வாங்கொ றோழி யீங்கைக்
கயத்துத் துய்ம்மல ருதிர
முன்றோ தென்ப பனிக்கடு நாளே.

என்பது பனிப்பருவங் குறித்துப் பிரிந்தான் தலைமகன், பிரியப் பருவ வரவின்கண் வேறுபடுவாளாயினும் கதுமென ஆற்றுவிப்பது அரிதெனுங் கருத்தினளாய்க் கூதிர்ப்பருவத்துத் தலைமகள் கேட்பத் தனது ஆற்றாமை விளங்கத் தோழி சொல்லியது.

கருவூர்க்கதப்பிள்ளை

௩௮௧. நெய்தல்

தொல்கவின் றொலைந்து தோணலஞ் சாஅய்
அல்ல னெஞ்சமோ டல்கலுந் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ
வெண்குருகு நரலுந் தண்கமழ் கானற்
பூமலி பொதும்பர் நன்மலர் மயக்கி
விலங்குதிரை யுடைதருந் துறைவனொ
டிலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே.

என்பது வரைவிடை ஆற்றாளாய தலைமகளை ஆற்றுவிக்கலுறுந் தோழி தலைமகனை இயற்பழித்தது.

௩௮௨. முல்லை

கண்டுழிக் கொற்றம் பைங்கொடி முல்லை
முகைத்தலை திறந்த நாற்றம் புதன்மிசைப்
பூமலர் தளவமொடு தேங்கமழ்பு கஞல
வம்பும் பெய்யுமார் மழையே வம்பன்று
காரிது பருவ மாயின்
வாரா ரோநங் காத லோரே.

என்பது பருவ வரவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி பருவ மன்று வம்பென்று வற்புறீஇயது.

குறுங்கீரன்

௩அ௩. பாலை

நீயுடம் படுதலின் யான்றர வந்து
குறிநின் றனனே குன்ற நாடன்
இன்றை யளவை சென்றைக் கென்றி
கையுங் காலு மோய்வன வொடுங்கித்
தீயுறு தளிரி னடுங்கி
யாவது மிலைபான் செயற்குரி யதுவே.

என்பது உடன்போக வருந்துந் தலைமகளை நாணுடைமை கெடச் சொல்லியது.
படுமத்து மோசிகீரன்[1]

௩அ௪. மருதம்

உழுந்துடைக் கழுதிற் கரும்புடைப் பணைத்தோள்
நெடும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிர்
நலனுண்டு துறத்தி யாயின்
மிகநன் றம்ம மகிழ்ந்த சூளே

என்பது நின் பரத்தையர்க்கு நீயுற்ற சூளுறவு நன்றயிருந்தது என்று நகையாடித் தோழி வாயின் மறுத்தது.
ஓரம்போகியார்

௩அ௫. குறிஞ்சி

பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடமை தயங்கப் பாயும்
பெருவரை யடுக்கத்துக் கிழவ னென்றும்
அன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மவிவ் வழுங்க லூரே.

என்பது வேற்று வரைவு மாற்றியது.
கபிலர்

(பி - ம்) 1. படுமாற்றூர்.

௩அசு. நெய்தல்

வெண்மணல் விரிந்த வீததை கானல்
தண்ணந் துறைவன் றணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணி கூட்டம்
மாலையோ வறிவேன் மன்னே மாலை
நிலம்பரந் தன்ன புன்கணொடு
புலம்புடைத் தாகுத லறியேன் யானே.

என்பது பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்து கூறியது. வெள்ளி வீதியார்

௩அஎ. முல்லை

எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலை
உயிர்வரம் பாக நீந்தின மாயின்
எவன்கொல் வாழி தோழி
கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே.

என்பது இதுவுமது. கங்குல் வெள்ளத்தார்

௩அஅ. பாலை

நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை யொற்றினும் வாடா தாகுங்
கவணை யன்ன பூட்டுப் பொருத சாவா
உமண ரொழுகைத்[1] தோடுநிரைத் தன்ன
முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைம்மடித் துயவுங்
கானமு மினியவா நும்மொடு வரினே.

என்பது தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமையுணர்ந்த தலைமகன் சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையுங் குறித்துச் செல வழுங்க லுறுவானைத் தோழி அழுங்காமற் கூறியது. ஔவையார்

(பி - ம்) 1. உமணெருத் தொழுகைத்.

ந௱௪௯. குறிஞ்சி

நெய்கனி குறும்பூழ் காய மாக
வார்பதம் பெறுக தோழி யத்தை
பெருங்கன் னாடன் வரைந்தென வவனெதிர்
நன்றோ மகனே யென்ற வெனை
னன்றே போலு மென்றுரைத் தோனே.

என்பது தலைமகன் தந்தேவன் மகனுன் வரைவு மலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

வேட்டகண்ணன்

ந௱௫௰. பாலை

எல்லு மெல்லின்று பாடுங் கேளாய்
செல்லா தீமோ சிறுபிடி துணையே
வேற்றுமுனை வெம்மையிற் சாய்த்துவந் திறுத்தென
வளையணி நெடுவேலேந்தி
மிளைவந்து பெயருந் தண்ணுமை குரலே.

என்பது புணர்ந்துடன் போயினரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுது செலவும் பகையுங் காட்டிச் செலவு விலக்கியது.

உறையூர் முதுகோதற்றன்

ந௱௫௰௧. முல்லை

உவரி யொருத்த வுழாஅது மடியப்
புகரி புழுங்கிய புயனீங்கு புறவிற்
கடிதிடி யுருமிற் பாம்பு பையவிந்
திடியொடு மயங்கி பிணிதுவீழ்ந் தன்றே
வீழ்ந்தமா மழைதழீஇப் பிரிந்தோர் கையறப்
பையுண் மாலைப் பூஞ்சினை யிருந்த
போழ்கண் மஞ்ஞை தாநீர் நனந்தலை
புலம்பக் கூஉந் தோழிபெரும்பே தையவே.

என்பது பிரிவிடைப் பருவ வரவின்கண் ஆற்றளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து சொல்லியது.

பொன்மணியார்

௩௬௨. குறிஞ்சி

அம்ம வாழியோ மணிச்சிறைத் தும்பி
நன்மொழிக் கச்ச மில்லை யவர்நாட்
டண்ணெ னெடுவரைச் சேறி யாயிற்
கடவை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
துளிரெறி நுண்டுகட் களைஞர் தங்கை
தமராற் றீரா ளென்மோ வரசர்
நிரைசேர் நுண்டேர் போலப்
பிரசந் தூங்கு மலைகிழ வோற்கே.

என்பது வரைவிடைக் கிழத்தியது நிலைமை தும்பிக்குச் சொல்லு வாளாய்ச் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லியது.

தும்பிசேர்கீரன்

௩௬௩. மருதம்

மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாடவச் சிலவே யலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினைவ லதிகன்
களிறொடு பட்ட ஞான்றை
யொளிறுவாட் கொங்க ரார்ப்பினும் பெரிதே.

என்பது தலைமகன் சிறைப்புறமாகத் தோழி அலர் மலிவுரைத்து வரைவுகடாயது. **பரணர்**

௩௬௪. குறிஞ்சி

முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடிக்
கூரை முற்றுஞ் சார 'ுடன்

முன்னு மினிய தாகிப் பின்னாள்
வார்திணை மேய்தந் தாங்குப்
பகையா கின்றவர் நகைவிளை யாட்டே.

என்பது வரைவிடை ஆற்றளாகிய கிழத்தியை ஆற்றுவிக்குந் தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறியது. குறியிறையார்

௩௧௫. பாலை

நெஞ்சே நிறையொல் லாதே யவரே
யன்பின் மையி னருள்பொரு ளென்னார்
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே
யாவது மதியிற் கிவரோர் போலக்
கனைய ராயினுங் கண்ணினது படீஇயர்
அஞ்சே லென்மரு மில்லை யந்தில்
அளிதோ தானே நாணே
யாங்கா வாவது நீங்கப் படினே.

என்பது வரைவிடை வைத்துப் பிரிய ஆற்றளாகிய கிழத்தி நாம் ஆண்டுச் சேறுமெனத் தோழிக்கு உரைத்தது.

௩௧௬. பாலை

பாலு முண்ணாள் பந்துடன் மேவாள்
விளையா டாயமோ டயர்வோ ளினியே
யெளிதென வுணர்ந்தனள் கொல்லோ முறிசினை[1]
யோமைக் குத்திய வுயர்கோட் டொருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வறைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குர லோர்க்குங்
கழைதிரங் காரிடை யவனொடு செலவே.

என்பது மகட் போக்கிய தாய் உரைத்தது. கயமனார்

(பி - ம்) 1. *முளிசினை.*

௩௯௭. நெய்தல்

நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்தல் போல
ஊதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னா யென்னுங் குழவி போல
இன்னா செயினு மினிதுதலை யளிப்பினு
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே.

என்பது வரைவிடை வைத்து நீங்குந் தலைமகற்குத் தோழி உரைத்தது.

அம்மூவனார்

௩௯௮. பாலை

செற்றா மன்றே தோழி தண்ணெனத்
தூற்றுந் திவலைத் துயர்கூர் காலைக்
கயலே ருண்கண் கனங்குழை மகளிர்
கையுறை யாக நெய்பெய்து மாட்டிய
சுடர்துயி லெடுப்பும் புன்கண் மாலை
அரும்பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு
மெய்வலி யுவகைமீ னெழுதரு
கண்கலி முழங்குபனி யாக்கு வோரே.

என்பது 'பிரிவுணர்த்திய தோழி தலைமகன் பிரிந்து வினைமுற்றி வருந்துணையும் ஆற்றியுளராவரென்று உலகியன்மேல் வைத்து உரைத்தாட்குத் தலைமகள் ஆற்றாமை மீதூரச் சொல்லியது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ

௩௯௯. மருதம்

ஊருண்கேணி யுண்டுறை தொக்க
பாசி யற்றே பசலை காதலர்

தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

என்பது வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பரணர்

௪00. முல்லை

சேயாறு செல்லா மாயி னிடரின்று
களைஇக் காமம் பெருந்தோட் கென்று
நன்றுபுரிந் தெண்ணிய மனத்தை யாகி
முரம்புகண் ணுடைய வேகிக் களரிக்
கரம்பைப் புதுவழிப் படுத்த மதியுடை
வலவோ, யின்று தந்தனை தேரே
நோயுழந் துறைவியை நல்க லானே.

என்பது வினைமுற்றி வந்த தலைமகன் தேர்ப்பாகனைத் தலையளித்தது.

பேயன்

௪0௧. நெய்தல்

அடும்பி னாய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரை மகளி ரஞ்சி யீர்ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனொ டொருநாள்
நக்குவிளை யாடலுங் கடிதன்
றைதெமக் கம்ம மெய்தோய் நட்பே.

என்பது வேறுபாடு கண்டு இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

அம்மூவனார்

இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடி சிற்றெல்லையாகவும் எட்டடி பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது.

குறுந்தொகை முற்றிற்று.

செய்யுள் முதற்குறிப்பு

அகவன்மகளே ௨௩
அஞ்சிலோதி ௨௧௧
அஞ்சுவதறியா ௨௩௭
அடும்பினாய்மலர் ௪௦௧
அடும்பவிழணி ௩௪௧
அணிற்பல்லன்ன ௪௯
அத்தவாகை ௩௬௯
அதுகொறோழி ௫
அதுவரலன்மை ௨௪௮
அம்ம... ...நூலறு ௧௦௪
அம்ம... ...காதலர் ௨௮௭
அம்ம... ...கொண்கன் ௨௩௰
அம்ம... ...நம்மூர் ௧௪௬
அம்ம... ...நம்மொடு ௧௩௪
அம்ம... ...புன்னை ௨௯௬
அம்ம... ...முன்னி ௩௫௰
அம்ம... ...யன்னை ௩௬௧
அம்ம... ...யாவதும் ௭௭
அம்ம... ...யின்றவர் ௩௭௫
அம்மவாழியோ ௩௯௨
அமர்க்கணாமான் ௩௨௨
அமிழ்தமுண்க ௨௦௧
அமிழ்தத்தன்ன ௨௦௬
அமிழ்துபொதி ௧௪
அயிரைபரந்த ௧௭௮
அரிகரி ௧௮௪
அரிற்பவர்...வரி ௯௧
அரிற்பவர்ப்பிரம் ௩௬௪
அரும்பறமலர்ந்த ௨௬
அரும்பெறலமிழ் ௮௩
அருவிப்பரப்பி ௧௦௦
அருவிவேங்கை ௯௬
அருவியன்ன ௨௭௧
அருளுமன்பு ௨௦
அல்குறுபொழு ௨௭௩
அலர்யாங் ௩௧௧
அவ்விளிம்பு ௨௯௭
அவரே, கேடில் ௨௧௬
அவரோவாரார் ௨௨௧
அழியலாயிழை ௧௪௩
அளிதோதானே ௧௪௯
அறிகரிபொய்த்த ௧௮௪
அன்னாயிவனோ ௩௩
ஆசிறருவி ௨௭௭
ஆடமைபுரையு ௧௩௧
ஆம்பற்பூவின் ௪௬
ஆய்வளைஞெகிழ ௩௧௬
ஆர்கலிவெற் ௩௫௩
ஆர்கலி யாற்றொடு ௧௮௬
ஆர்களிறு ௫௨
இடிக்குங்கேளிர் ௫௮
இதுமற்... ...துனி ௧௮௧
இதுமற்... ...முதுநீர் ௨௯௯
இரண்டறிகள ௩௧௨
இருங்கண்ஞா ௨௬௭
இருடிணிந்தன்ன ௧௨௩
இல்லோனின் ௧௨௦
இலங்குவளை ௧௨௫
இலையிலஞ்சினை ௨௫௪
இவனிவளைம்பால் ௨௨௯
இவளே, நின்சொல் ௮௧
இழையணிந் ௩௪௫
இளமையாரார் ௧௨௬
இன்னளாயின ௯௮
இன்றியாண்டை ௩௭௯
இன்றேசென்று ௧௮௯
இனமயிலக ௨௪௯
ஈங்கே வருவர் ௧௯௨
ஈதலுந்துய்த்த ௬௩
உடுத்துந் தொடுத்தும் ௨௯௫

உதுக்காணதுவே ௧௯௧
உமணர்சேர்ந்து ௧௨௪
உரைத்திசிற்றோழி ௩௦௨
உவரியொருத்த ௩௯௧
உழுந்துடைக் ௩௮௪
உள்ளதுசிதைப் ௨௮௩
உள்ளார்... ...கான ௧௬
உள்ளார்... ...கிள்ளை ௬௭
உள்ளார்... ...யுள்ளி ௨௩௨
உள்ளிக்காண்பென் ௨௮௬
உள்ளினுள்ளம் ௧௦௨
உள்ளினெனல் ௯௯
உறுவளியுளரிய ௨௭௮
உறைபதியன்றி ௧௪௫
ஊஉரலரெழ ௨௬௨
ஊர்க்குமணித்தே ௧௧௩
ஊருண்கேணி ௩௯௯
எந்தையும்யாயும் ௩௭௪
எம்மணங்கினவே ௫௩
எல்லாமெவனோ ௩௨௩
எல்லுமெல்லின்று ௩௯௦
எல்லைகழிய ௩௮௭
எலுவசிறாஅ ௧௨௯
எவ்வியிழந்த ௧௯
எழின்மிகவுடைய ௨௪௭
எழுதருமதிய ௩௧௫
எற்றோவாழி ௯௰
எறிதருக்கலித்த ௩௧௮
எறும்பியளை ௧௨
என்னெனப்படுங் ௧௯௪
ஐயவியன்ன ௫௦
ஒடுங்கீரோதி ௭௦
ஒருநாள் வாரலன் ௧௭௬
ஒலிவெள்ளருவி ௮௮
ஒறுப்பவோ ௩௪
ஒன்றேனல்லேன் ௨௦௮
ஓம்புமதிவாழி ௨௩௫
ஓரூர்வாழினுஞ் ௨௩௧
கடல்பாடவிந்து ௧௭௭
கடலங்கான ௨௪௫
கடலுடனாடியும் ௨௯௪
கடும்புனறொடுத்த ௧௦௩
கண்டரவந்த ௩௦௫
கண்டிசிற்பாண ௩௫௯
கண்டுழிக்கொற்றம் ௩௮௨
கண்ணிமருப்பின் ௩௬௩
கணைக்கோட்டு ௧௬௪
கருங்கட்டாக்கலை ௬௯
கருங்கால்வேங்கை ௪௭
கருங்கால்வேம்பின் ௨௪
கல்லென்கானத்து ௧௭௯
கலிமழைகெழீஇய ௨௬௪
கலைகைதொட்ட ௩௪௨
கவவுக்கடுங்குரையள் ௧௩௨
கவலைகெண்டிய ௨௩௩
கவலையாத்த ௨௨௪
கழனிமாத்து ௮
கழிதேர்ந்தசைஇய ௩௦௩
கழியிற்காவி ௧௪௪
கள்ளிற்கேளி ௨௯௩
கறிவளரடுக்கத் ௨௮௮
கன்றுதன்பயமுலை ௨௨௫
கன்றுமுண்ணாது ௨௭
காணினிவாழி ௧௭௪
காதலருழைய ௪௧
காந்தள்வேலி ௭௬
காந்தளங்கொழுமுகை ௨௬௫
காமங்கடையி ௩௪௦
காமங்காம...நினைப்பின் ௨௦௪
காமங்காம...நுணங்கி ௧௩௬
காமந்தாங்கு ௨௯௦
காமமொழிவ ௪௨
கார்புனந்தந்த ௧௬௨
காலையும்பகலு ௩௨

காலையெழுந்து ௪௫
காலேபரிதப் ௬௪
கானங்கோழி ௨௪௨
கானமஞ்ஞை ௩௮
கானயானை ௭௯
கானவிருப்பை ௩௨௯
குக்கூவென்றது ௧௫௭
குணகடற்றிரை ௧௨௮
குருகுகொள ௧௨௭
குருகுமிருவிசும் ௨௬௦
குவளைநாறு ௩௦௦
குவியிணர்த் ௧௦௭
குறுந்தாட்கூதா ௬௦
குறும்படைப்பகழி ௩௩௩
குன்றக்கூகை ௧௫௩
கூந்தலாம்பல் ௮௦
கூர்முண்முண்டக ௫௧
கேட்டிசின்வாழி ௩௦
கேளாராகுவர் ௨௫௩
கேளிர்வாழியோ ௨௮௦
கைவளைநெகிழ்தலு ௩௭௧
கைவினைமாக்கள் ௩௦௯
கொங்குதேர் ௨
கொடியோர்நல்கா ௩௬௭
கொடுங்கான்முதலை ௩௨௪
கொண்கனூர்ந்த ௨௧௨
கொல்வினைப்பொ ௩௦௪
கொன்னூர்துஞ்சி ௧௩௮
கோடலெதிர்முகை ௬௨
கோடீரி...கலழும்...௧௧
கோடீரி... ...கழிந்து ௩௬௫
கௌவையஞ்சி ௧௧௨
சிறுவீஞாழல் ௩௨௮
சிறுவெண்காக்கை ௩௩௪
சிறுவெள்ளரவி ௧௧௯
சிறைபனியுடைந்த ௮௬
சுடர்சினந்தணி ௧௯௫
சுடர்செல்வானம் ௨௩௪
சுடுபுனமருங்கிற் ௨௯௧
சுரஞ்செல்யானை ௧௬௯
சுரந்தலைப்பட்ட ௨௦௯
சுனைப்பூக்குற்று ௧௪௨
செங்களம்பட ௧
செப்பினஞ்செலினே ௨௦௭
செல்வச்சிறாஅர் ௧௪௮
செல்வாரல்லர் ௪௩
செவ்வரைச்செச்சை ௧௮௭
செவ்விகொள்வரகின் ௨௮௨
செற்றுமன்றே ௩௯௮
செறுவார்க்குவகை ௩௩௬
சென்றநாட்ட ௧௮௩
சேணோன்மாட்டிய ௧௫௦
சேயாறுசெல்லா ௪௦௦
சேயாறுசென்று ௨௬௯
சேயுயர்விசும் ௩௧௪
சேரிசேர ௨௯௮
சேறிரோவென ௨௬௮
சேறுஞ்சேறு ௩௨௫
சோலைவாழை ௩௦௮
ஞாயிறு காயாது ௩௭௮
ஞாயிறுபட்ட ௯௨
தச்சன்செய்த ௬௧
தண்கடற்படு ௧௬௬
தலைப்புணைக்கொ ௨௨௨
தழையணியல்குல் ௧௫௯
தாஅவஞ்சிறை ௧௭௨
தாதிற்செய்த ௪௮
தாமரைபுரையு-காப்புச்செய்யுள்
தாமேசெல்ப ௩௪௮
தாழிருடிமிய ௨௭௦
திண்டேர்நள்ளி ௨௧௦
திரிமருப்பிரலை ௩௩௮
திரிமருப்பெருமை ௨௭௯
தினைகிளிகடி ௨௧௭

தீண்டலுமியைவது ௨௭௨
துணைத்தோகை ௩௨௬
துறுகலயலது ௩௬
தோடிநெகிழ்ந்தன ௨௩௯
தொல்கவின் ௩௮௧
நசைநன்கு ௨௧௩
நசைபெரிது ௩௭
நமக்கொன்று ௨௬௬
நல்கின்வாழு ௩௨௭
நல்லுரையிகந்து ௨௯
நலத்தகைப்புலத்தி ௩௩௦
நள்ளென்றன்றே ௬
நறையகில் ௩௩௯
நன்னலந்தொலைய ௯௩
நனைமுதிர்ஞாழ ௩௯௭
நாகுபிடிநயந்த ௩௪௯
நாணிலமன்ற ௩௫
நிரைவளைமுன்கை ௩௩௫
நிலத்தினும் பெரிதே ௩
நிலந்தொட்டு ௧௩௦
நிலம்புடைபெயரினும் ௩௭௩
நிழலான்று விரிந்த ௩௫௬
நினையாய்வாழி ௩௪௩
நீகண்டனையோ ௭௫
நீயுடம்படுதலின் ௩௮௩
நீர்கால்யாத்த ௩௮௮
நீர்நீடாடிற் ௩௫௪
நீர்வார் கண்ணை ௨௨
நுதல்பசப்பிவர்ந்து ௧௮௫
நெஞ்சேநிறை ௩௯௫
நெடியதிரண்ட ௨௫௨
நெடுங்கழை ௩௩௧
நெடுநீராம்ப ௩௫௨
நெடுவரை மருங்கி ௧௫௮
நெய்கனி குறும்பூழ் ௩௮௯
நெய்தற்பரப்பி ௧௧௪
நெருப்பினன்ன ௧௯௦
நெறியிருங்கதுப் ௧௯௦
நோமென்... ...இமை ௪
நோமென்... ...புண் ௨௦௨
நோற்றோர்மன்ற ௩௪௪
பசப்பென்மேனி ௨௧௯
படரும்பைய ௨௧௫
பணைத்தோட்குறு ௨௭௬
பதலைப்பாணி ௫௯
பரலவற்படு ௨௫௦
பருவத்தேன ௧௭௫
பல்லாநெடுநெறி ௬௪
பல்லிபடீஇய ௩௪௧
பல்லோர் துஞ்சு ௨௪௪
பலருங்கூறுக ௧௭௦
பலவிற்சேர்ந்த ௩௮௫
பழமழைக்கலித்த ௨௨௦
பழமழைபொழி ௨௬௧
பழூஉப்பல்லன்ன ௧௮௦
பறைபடப்பணில ௧௫
பனிப்புதலிவர்ந்த ௨௪௦
பனைத்தலைக்கருக் ௩௭௨
பாசவலிடித்த ௨௩௮
பார்ப்பனமகனே ௧௫௬
பால்வரைத்தமைத்த ௩௬௬
பாலுமுண்ணாள் ௩௯௬
பாவடியுரல ௮௯
புரிமடமரையான் ௩௧௭
புல்வீழிற்றி ௧௦௬
புள்ளும்புலம்பின ௩௧௦
புள்ளுமாவும் ௧௧௮
புறவுப்புறத்தன்ன ௨௭௪
புனவன்... ...கடி ௧௦௫
புனவன்... ...கிளி ௧௩௩
பூவளைந்தன்ன ௨௨௭
பூவொடுபுரையு ௨௨௬
பூவிடைப்படினு ௫௭
பூவொத்தலமரு ௭௨

பூழ்க்காலன்ன ௬௮
பெய்துகுன்றத்து ௨௦௦
பெயர்த்தனென் ௮௪
பெயல்கண்மறை ௩௫
பெயன்மழை ௧௭௪
பெருங்கடற்பர ௩௨௦
பெருங்கடற்... ...களிற் ௨௪௬
பெருங்கடற்... ...நீத்து ௩௧௩
பெருந்தண்மாரி ௯௪
பெருநன்றாற்றி ௧௧௫
பெருவரைமிசை ௭௮
பெறுவதியையா ௧௯௯
பேரூர்கொண்ட ௨௨௩
பைங்காற்கொக்கின் ௧௨௨
போத்தில்காழ ௨௫௫
பொருதயானை ௨௮௪
பொய்கையாம்ப ௩௭௦
பொழுதுமெல்லின்று ௧௬௧
பொன்னேராவிரை ௧௭௩
மகிழ்ந்ததன்றலை ௧௬௫
மகிழ்நன்மார்பே ௭௩
மட்டம்பெய்த ௧௯௩
மடவமன்ற ௬௬
மடவவாழி ௨௫௧
மண்ணியசென்ற ௨௯௨
மணிவார்ந்தன்ன ௨௫௬
மயங்குமலர் ௩௯௩
மரங்கொல்கானவன் ௨௧௪
மருந்தெனின் மருந்தே ௭௧
மல்குசுனைப்பு ௩௪௭
மலரேருண்கண் ௩௭௭
மலைச்[illegible]சர், அஞ்செஞ் ௩௨௧
மலை[illegible]டையிட்ட ௨௦௩
ம[illegible]சேர்ந்து ௨௫௯
மனை[illegible]விளையாடு ௧௦௮
மள்ளர்குழீஇய ௩௧
மறிக்குரலறுத்து ௨௬௩
மன்றமரா அத்த ௮௭
மன்னுயிரறியா ௩௭௬
மனையுறைகோழி ௧௩௯
மாக்கழிமணிப்பூ ௫௫
மாசறக்கழீஇய ௧௩
மாரிப்பித்திகத்து ௧௬௮
மாரியாம்பலன்ன ௧௧௭
மால்வரையிழிதரு ௯௫
மாவெனமடலு ௧௭
மானடியன்ன ௨௪௩
மானேறுமடப்பிணை ௩௧௯
மின்னுச்செய் ௨௦௫
முகைமுற்றினவே ௧௮௮
முட்காலிறவின் ௧௦௯
முட்டுவேன்கொ ௨௮
முதைப்புன ௧௫௫
முருகயர்ந்து ௩௬௨
முல்லையூர்ந்த ௨௭௫
முலையே முகிழ் ௩௩௭
முழந்தாளிரும்பிடி ௩௯௪
முழவுமுதலரைய ௩௦௧
முளிதயிர்பிசைந்த ௧௬௭
முனிபடருழந்த ௩௫௭
மெய்யோ வாழி ௧௨௧
மெல்லியலரிவை ௧௩௭
மெல்லியலோயே ௩௬௮
மெல்லியவினிய ௩௦௬
மென்றோணெகிழ்த்த ௧௧௧
யாஅங்கொன்ற ௧௯௮
யாங்கறிந்தனர் ௧௫௪
யாதுசெய்வா ௧௯௭
யாமெங்காம ௨௪௧
யாயாகியளோமாஅ ௯
யாயாகியளேவிழவு ௧௦
யாயும்யாயும் ௪௦
யாரணங்குற்றனை ௧௬௩
யாரினுமினியன் ௮௫

யாருமில்லை ௨௫
யாவதுமறிகிலர் ௧௫௨
யானயந்துறைவோள் ௧௧௬
யானே... ...னெனல் ௫௪
யானே... ...யென்னலனே ௯௭
வங்கர்கடந்த ௧௫௧
வண்டுபடைத்ததைந்த ௨௧
வந்தவாடை ௩௩௨
வளர்பிறைபோல ௨௮௯
வளையுடைத்தனைய ௩௦௭
வளையோய் ௩௫௧
வளைவாய்ச்சிறு ௧௪௧
வன்பாற்றெள்ளறல் ௬௫
வாரலெஞ்சேரி ௨௫௮
வாராராயினும் ௧௧௦
வாருறுவணர் ௮௨
விசும்புகண்புதைய ௩௮௦
விட்டகுதிரை ௭௪
விட்டெனவிடுக்கு ௨௩௬
விடர்முகையடுக் ௨௧௮
விரிதிரைப்பெருங் ௧௦௧
வில்லோன்காலன ௭
விழுத்தலைப்பெண்ணை ௧௮௨
வினையேயாடவர் ௧௩௫
வீங்கிழைநெகிழ ௩௫௮
வீழ்தாழ்தாழை ௨௨௮
வெண்மணல்விரிந்த ௩௮௬
வெண்மணற் பொதுளிய ௨௮௧
வெந்திறற்கடுவளி ௩௯
வெறியென வுணர்ந்த ௩௬௦
வேட்டச்செந்நாய் ௫௬
வேதினவெரிநின் ௧௪௦
வேம்பின்பைங்காய் ௧௯௬
வேரல்வேலி ௧௮
வேருமுதலும் ௨௫௭
வேனிற்பாதிரி ௧௪௭
வைகாவைகல் ௨௮௫

பாடினோர் பெயரட்டவணை

எண் : செய்யுளெண்

அஞ்சியாத்தை உகூச
அண்டர்மகன் குறுவழுதி ஙசரு
அணிலாடு முன்றிலார் சக
அம்மூவனார் சகூ, கஉரு, கசுங, ங0ங, ங0சு, ஙகஅ, ஙஉஎ, ஙசய, ஙருக, ஙகூஎ, ச0க
அரிசில்கிழார் ககூங
அழிசிநச்சாத்தனார் உஎக
அள்ளூர் நன்முல்லை ஙஉ, சுஎ, சுஅ, கூங, கூசு, கச0, கருஎ[1], உ0உ, உஙஎ
அறிவுடைநம்பி உஙய
ஆசிரியன் பெருங்கண்ணன் [உஙகூ
ஆதிமந்தி ஙக
ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன் கஅச
ஆலங்குடி வங்கனார் அ, சரு
ஆலத்தூர்கிழார் ககஉ, ஙருய
இடைக்காடர் உருக
இருந்தையூர்க் கொற்றன் புலவன் ஙஙரு
இளங்கீரந்தையார் கசஅ
இளங்கீரன் ககசு
இளம்பூதனார் ஙஙச
இறையனார் உ
ஈழத்துப் பூதன்றேவன் ஙசங
உகாய்க்குடிகிழார் சுங
உருத்திரன் உஎச
உலோச்சனார் கஎரு, கஎஎ, உ0ரு, உசஅ
உழுந்தினம் புலவன் ஙஙங
உறையன் உ0எ
உறையூர்ச் சல்லியன் குமாரன்
,, ச் சிறுகந்தன் உருஎ [ரு0கூ
,, ப் பராயனார் ஙஎச
,, முதுகண்ணன்சாத்தன் கஙங
,, முதுகூத்தன் ஙருங, ஙஎக
,, முதுகொற்றன் உஉக, ஙகூய
ஊண்பித்தை உஙஉ
எயிற்றியனார் உஅசு
ஐயூர் முடவன் கஉங; உ0சு, ஙஉஉ
ஒக்கூர் மாசாத்தியார் கஉசு, கஙகூ, கஅசு, உஉய, உஎரு
ஒருசிறைப் பெரியன் உஎஉ
ஓரோடகத்துக் கந்தரத்தனார்
ஓதஞானி உஉஎ [கருரு
ஓதலாந்தையார் கஉ, உக, ஙஉகூ
ஓரம்போகியார் ய, எய, கஉஉ, கஉஎ, ஙஅச
ஓரிற்பிச்சையார் உஎஎ
ஔவையார் கரு, உங, உஅ, உகூ, ஙகூ, சங, அ0, கூக, கூகூ, க0உ, கருஅ, கஅங, உ00, ஙகூச, ஙஅஅ
கங்குல் வெள்ளத்தார் ஙஅஎ
கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன் உகங, உகசு
,, நன்னாகையார் ஙய, கஎஉ, கஅய, ககூஉ, ககூஎ, உஅஎ
கடம்பனூர்ச் சாண்டிலியன் ங0எ
கடியலூர் உத்திரங் கண்ணன் ஙருஉ
கடுகு பெருந்தேவன் உருரு
கடுந்தோட்கரவீரன் சுகூ

1. இப்பாட்டு அள்ளூர்நன்மூலன் பாடியதாகக் காணப்படுகிறது.

கடுவன் மள்ளன் ௮௨
கணக்காயன் தத்தன் ௩௦௪
கண்ணன் ௨௪௪
கதக்கண்ணன் ௯௪
கபிலர் ௧௩, ௧௮, ௨௫, ௩௮, ௪௨, ௮௭, ௯௫, ௧௦௦, ௧௦௬, ௧௧௫, ௧௨௧, ௧௪௨, ௧௫௩, ௧௮௭, ௧௯௮, ௨௦௮, ௨௨௫, ௨௪௧, ௨௪௬, ௨௪௯, ௨௫௯, ௨௬௪, ௨௮௮, ௨௯௧. ௩௧௨, ௩௫௫, ௩௫௭, ௩௬௧, ௩௮௫
கயத்தூர் கிழான் ௩௫௪
கயமனார் ௯, ௩௫௬, ௩௭௮, ௩௯௬
கருவூர்க்கதப்பிள்ளை ௬௪, ௨௬௫, [௩௮௰
,, கிழார் ௧௭௦
,, ச் சேரமான் சாத்தன் ௨௬௮
,, ப் பவுத்திரன் ௧௬௨
,, ஓதஞானி ௭௧
கல்பொரு சிறுநுரையார் ௨௯௰
கல்லாடனார் ௨௬௰, ௨௬௬
கவைமகன் ௩௨௪
கழாஅர்க்கீரனெயிற்றியன் ௩௩௰
,, கீரனெயிற்றி ௩௫, ௨௬௧
கள்ளிலாத்திரையன் ௨௯௩
காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ௨௧௰
காமஞ்சேர்குளத்தார் ௪
காலறி கடிகையார் ௨௬௭
காவன்முல்லைப் பூதனார் ௧௦௪, ௨௧௧
காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் ௩௪௨
,, காரிக்கண்ணன் ௨௯௭
,, ச் சேந்தன் கண்ணன் ௩௪௭
கிடங்கிற் குலபதிநக்கண்ணன் ௨௫௨
கிள்ளிமங்கலங் கிழார் ௭௬, ௧௧௰, ௧௫௨, ௧௮௧
குட்டுவன் கண்ணன் ௧௭௯.
குடவாயிற் கீரத்தனார் ௭௯, ௨௮௧, ௩௬௯
குப்பைக்கோழியார் ௩௦௫
குழற்றத்தன் ௨௪௨
குறியிறையார் ௩௯௪
குறுங்கீரன் ௩௮௨
குறுங்குடிமருதன் ௩௪௪
குன்றியனார் ௫௰, ௫௧, ௧௧௭, ௨௩௮, ௩௦௧, ௩௩௬
கூடலூர்கிழார் ௧௬௬, ௧௬௭, ௨௧௪
கூவன் மைந்தன் ௨௨௪
கொல்லனழிசி ௨௬, ௧௩௮, ௧௪௫, ௨௪௰
கொல்லிக்கண்ணன் ௩௪
கொற்றன் ௨௧௮, ௩௫௮
கோக்குளமுற்றன் ௯௮
கோப்பெருஞ்சோழன் ௨௰, ௫௩, ௧௨௯, ௧௪௭
கோவத்தன் ௬௬, ௧௯௪
கோவூர்கிழார் ௬௫
